பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

சந்தா விபரம்.

	ரூ. அ.
வருட சந்தா.	3—0
6 மாத சந்தா.	1–12
வெளிநாடுகளுக்கு வருட சந்தா	4—0

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தா வுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

விளம்பர விகிதம்.

	ரூ. அ
கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு	5—0
சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு	0—8

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத் தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஸூ மார்கழி-மீ உள-உ (10—1—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் ந௩



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ—அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

நாகை ரெயில்வே தொழிலாளர் சங்கம்

28–12 25 ல நமது சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற நிர்வாகக் கூட்டத்தில் தொழிலாளர் ஸ்ரீமான். ஏகாம்பர நாயுடு அவர்களால் கதர் விஷயமாக அடியில் கண்ட தீர்மானம் கொண்டு வரப்பட்டது; இந்நாகை நகரில் கதரை அநேகமாக ஆதரிப்பவர்கள் தொழிலாளர்களென்றும், பணக்காரர்கள் கதரை ஒருவர் கட்டுவதுகூட துர்லபமாக விருக்கிறதென்றும், சென்ற தீபாவளியில் தேசபக்த சமாஜத்தை தவிர மற்ற இரண்டொரு கதர் கடைக்காரர்கள் எல்லார் முதலிய போலிக்கதர்களை வைத்து வியாபாரம் செய்தும் தொழிலாளர்களில் அநேகர் போலிக்கதர் என்று தெரிந்தும் அபிமானத்தாலும் அவசியம் கதரையே உடுத்தவேண்டுமென்றும் கொண்ட பிடிவாதத்தாலும் சுமார் ரூ. 4000/– வரையில் வியாபாரம் நடந்திருக்கிறது என்றும் போலிக்கதருடுத்துவதும் தவிர கடை வியாபாரிகளுக்கும் கொள்ளை லாபமாக தொழிலாளர்களே கொட்டிக்கொடுக்க வேண்டியிருப்பதால் நமது சங்கத்திலேயே தொழிலாளர்களாகிய, வேலையில்லாத ஏழைமக்களுக்கு ஆகாரம் அளிக்கக்கூடிய சுத்தமான கதரை தொழிலாளர்களும் ஏழைகளுமாகிய நாம் ஆதரிக்கவேண்டியது அவசியமென்றும் ஆகையால் நமது சங்கத்தின் பொதுப்பணத்திலிருந்து கதர் வியாபாரம் செய்யவேண்டுமென்பது. நிர்வாக சபை மெம்பர்களில் ஸ்ரீமான்கள். ருத்திராதிபதி பிள்ளை மாணிக்கதாஸ் முதலியார் இவர்கள் ஷை தீர்மானத்தை ஒப்புக் கொண்டு ரூ. 500/— சங்கத்திலிருந்து அநுமதிக்கும்படி பிரேரேபித்ததில் தலைவர் ஸ்ரீமான். K.C. சுப்பிரமணியஞ்செட்டியார் பார்-அட்-லாபொக்கிஷதார் ஸ்ரீமான். வெ. ப. கா. காயாரோகணம் பிள்ளை நிர்வாகமெம்பர்கள் ஸ்ரீமான்கள் T.P. ஆறுமுகம் பிள்ளை இவர்கள் ஷை தீர்மானத்தை எதிர்த்து நமது சங்கத்தில் ஏற்கனவே பலவித வியாபாரங்கள் செய்யப்பட்டு அதிகமான நஷ்டமாயிருக்கிறதினால் பொறுப்பேற்று நஷ்டமில்லாமல் ஷை வியாபாரம் நடத்த முடியாதென்றும், இல்தன்றி மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ 300க்கு வியாபாரம் ஆனால்தான் நஷ்டம் வராமலும் மேல் கொண்டு ஒரு குமாஸ்தாவுக்கு ரூ. 15 சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும், ஆகவே, நமது சங்கத்தின் தற்காலநிலைமையில் ஷை வியாபாரம் செய்ய முடியாது என்றார்கள். கடைசியில் ஷை தீர்மானமானது நிறைவேறினவுடன் ஷை வியாபாரத்தை நடத்த வேண்டியதற்காக ஸ்ரீமான்கள் ருத்திருபதி பிள்ளை ஏகாம்பர நாயுடு. ரெங்கசாமிபிள்ளை ஆகியமூவரையும்கமிட்டியாராக நியமிக்கப்பட்டது. ஆனால் நான்மேல் கண்ட ரூபாயின் துகையானது போதாதென்றும், அடிக்கடி நல்ல ரகங்களாகவும், தற்காலம் தொழிலாளர்களுக்குப் பிடித்தவைகளானதுமான கதர் ஜவுளிகளை அடிக்கடி நேரில் போய்ப் பார்வையிட்டு வாங்குவதற்காக நேரிடும் சிலவுகள் அதிகமாவதோடு மேல் கண்ட கமிட்டியார்கள் தொழிலாளர்களாயிருப்பதால் அவர்கள் வேலையைச்செய்து கொண்டு, மாலை 5. மணிக்கு மேல் ஷை வியாபாரத்தைச் செய்வதாகவிருந்தால் கதர் விருத்தியாகாதென்று எண்ணுகிறேன். ஆகையால் கதர் போர்டாரிடம் நமது சங்கத்தின் மூலதனத்திலிருந்து ரூ. 1000 அல்லது ரூ 2000-மாவது ஜாமீனுகக் கட்டி விட்டால் ஒரு குமாஸ்தாவுக்கு ரூ.15 சம்பளச்சிலவு மாத்திரமல்லாது வேறுளச் சிலவுமில்லாமல் கதர் வியாபாரத்தைச்செய்துகதரைவிருத்தி செய்யலாமென்று எண்ணுகிறேன். தற்போது எங்கள் சங்கத்தின் பணத்தை ரூ.100-க்கு முக்காலரைக்கால் வட்டிக்கு நகை ஈடாக தொழிலாளர்களிடமே வட்டிக்கு கொடுத்து வாங்கப்படுகிறது. ஆனால் மேல் கண்டபடி கதர் போர்டாரிடம் ஜாமீனுகக் கட்டும் பணத்திற்கு அரை வட்டி கிடைத்தாலும் போதுமென்றும். எவ்விதமாகவாவது கதர் விருத்தியானல் போதுமென்றும்எண்ணுகிறேன். ஆகையால் கதர் போர்டார் ஷை ரூபாயை ஜாமீனுகப் பெற்றுக் கொண்டு தங்கள் பொருப்பிலேயே நமது சங்கக் கட்டிடத்தில் கதர் டெப்போ ஒன்று திறந்துவைக்கச் சம்மதிப்பார்களா! இதைப் பற்றி தலைவர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

D. Krishnasami
Pecreesamy

தேவதைகளுக்கு உயிர்ப்பலி.

முசிரியிலிருந்து ,வெ. சொக்கலிங்கம் செட்டியார் எழுதுகிறார்:

தமிழகத்தில் பன்னாட்களாகப் பொது மக்கள் பலராலும், அறிஞரெனக் கருதப்படுகின்றவர்களில், ஒரு சிலராலும் உயிர்ப்பலியிடுதல், ஓர் உயரிய நோக்கமேயென உரைத்து வந்தனர். சின்னாட்களாக அத்தகைய எண்ணம் மக்களின் மனத்திலிருந்து மெல்லெலன என் திடீரென மாறறமுண்டாகும் ஒரு வித எழுச்சியை இன்று காண நாம் அகமகிழ்கின்றோம்! புதிய மனைவியை மணந்துகொள்ள விரும்புகின்றவனும், நன்மக்கட் பேற்றை விரும்புகின்றவர்களும், தங்களுக்கோ தங்கள் உற்றார் பெற்றாருக்கோ உண்டாகியிருக்கும் நோய்கள் தீர்வதற்குப், ஏனைய பொருள்கள் தங்கள் வசமாவதற்கும், விரும்புகின்ற மக்கள் தங்களுக்குத்தெரிந்துள்ள அல்லது தாங்கள் மிகுந்த சக்தியமைந்த தெய்வீகமென்று நம்புகிற மாரியாத்தாளுக்கோ, காளியம்மனுக்கோ, கருப்பண்ணனுக்கோ, மதுரைவீரனுக்கோ இன்னும் இவைபோன்ற தெய்வங்களிலொன்றுக்கு ஆட்டையோ, சேவலையோ, உயிர்ப்பலியிடுவதாக வேண்டுகின்றனர், முன்னைய நல்வினையின் காரணமாகவோ வேறெக்காரணம்பற்றியோ தங்கள் காரியம் சித்திபெற்றதைக்கண்ட ஒரு சாரார் அவ்வெற்றி தங்களால் உயிர்ப்பலியூட்டுவதாக வேண்டிக்கொள்ளப்பட்ட. தேவதையின் தெய்வீக சக்தியினலேற்பட்டதாகக் கருதி தங்கள் தீர்மானப்படி—வேண்டுதலையின்படி ஆடு கோழி உயிர்ப்பலியிடுகின்றனர். ஏழுவருடத்துக்கொருமுறை திருவிழாக் கொண்டாடும் துர்க்கை, காளி முதலியவைகளின் திருவிழாக் கொண்டாட்டக் காலங்களிலும் பிடாரி, துர்க்கை முதலிய கிராம தேவதைகளின் வருடாந்திரத் திருவிழாக் காலங்களிலும் ஆடுகளின் (கொழிகளின்) உயிர்களுக்குத் திண்டாட்டம் ஏற்படுவதை நாம் கண்டும், கேட்டும் வருகிறோம். சில அரசாங்கத்தார் சில சட்டங்களை கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதுபோல் உவமையாக துருக்கி அரசாங்கத்தில் 21 வயதுக்கு மேற்பட்டவர்தான் மணந்து கொள்ளுதல் வேண்டுமென்றிருப்பது போன்று நம்மவர்களில் ஒரு சில வகுப்புக்ளுக்கு குறிப்பிட்ட காலங்களில் உயிர்ப்பலியிடவேண்டுமென்ற கட்டாயச்சட்டம் (அவர்களின் குல. தேவதைகளுக்கு) அவ்வகுப்பிலுள்ளவர்களால் கையாளப்படுகிறது. அத்தகைய சட்டத்தின்படி ஏழ்மையினலோ ஜீவகாருண்யத்தினலோ பிறவற்றினலோ நடக்க இயலாதவர்களாக இருப்பின் அபராதம் விதிக்கப்படுவதிலிருந்து சமூகப் பஹிஷ்க்காரம் வரைக்குமுள்ள தண்டனைகளுக்கு அவர்கள் ஆளாகிறார்கள். உயர்ப்பலியிடுதலென்னுமிவ்விழிதொழில் பெரும்பான்மையாக ஒடுக்கப்பட்ட வகுப்பார்களுக்குள்ளும் சில மத்திய வகுப்புகளுக்குள்ளும் நீண்டநாளாகப் பழக்கத்திலிருந்து வருகிறது. இத்தகைய மக்களின் பழக்க வாசனையினலும் இவர்கள் தங்களது கருமங்கள் தங்களிஷ்ட தேவதைகளின் உயிர்ப்பலியின் காரணமாகவே சித்தியடைந்ததாக இவர்களால் செய்யப்படும் பலத்த பிரசாரத்தில் மதிமயங்கித் தாங்களும் தங்கள் காரியங்களைச் சீராக்கி கொள்ளுவான் கருதி இவ்விழி தொழிலுக்குட்பட்டிருக்கின்ற பல உயர்ந்த வகுப்பினர்களுமுளர். துஷ்ட தேவதைகளை உபாசிப்பதாகக் கூறிக்கொள்பவர்களும் பேய்களையும் பைசாசங்களையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருப்பவர்களென நம்பப்படுகிறவர்களில் பலரும் இவ்வுயிர்ப்பலியூட்டுதலைத்தங்களுக்குற்ற துணையெனக்கருதுகின்றனர். உயிர்ப்பலியூட்டவுஞ் செய்கின்றனர். இனிப்புராதனமானதாய் எந்நாட்டு மக்களும் போற்றுகின்றதாய் எல்லாமதங்களையும் தனக்குள் ளடக்கி தான் மட்டும் அவைகளுக்கும் மீறிநிற்கின்றதான நம் இந்துமதத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளை நாம் சற்று ஆராய்வோம். பிறவுயிர்களிடத்து எவன் அன்புபாராட்டுகின்றானே அவனே மனிதன். அன்புபாராட்டா மற்றவன் மகனல்லன் விலங்கினத்தைச் சேர்ந்தவனுகவே அவன் கருதப்படுகின்றனென்பதை நம் இந்து மதம் மட்டுமல்ல எல்லாமதங்களும் ஒன்றுசேர்ந்து கூறுகின்றன. அதிலும் நம் இந்துமதத்தில் இத்தகைய தருமத்தையே சாலச்சிறந்ததாகக் கூறப்படுகின்றது. நம் பொய்யா மொழியார் "அறவினையாதெனில் கொல்லாமை கோறல் பிறவினை யெல்லாம் தரும். "எனக்கூறியிருத்தலைக் காண்க. நம் புராதன செங்கோன் முறையை நம்மவர்கள் சிறப்பிக்கப் புகுங்காலையில் 'தன்னுயிரென மன்னுயிரோம் பிஞனென்'றல்லவோ

கூறியிருக்கின்றனர். அங்ஙனமாயின் நம் நாட்டு அரசர்கள் உயிர்களிடத்து எத்துணை காருண்யங் காட்டியிருக்கின்றனர். முல்லைக் கொடிக்குத் தேரளித்த பாரியையும் மயிலுக்குப் போர்வையளித்த பேகனையும் வணங்காத தமிழர்கள் சிறப்பிக்காத தமிழர்கள் உண்டோவென நாம் ஐயுருகின்றோம் ஓரறிவுடைய முல்லைக் கொடியுங் காட்டில் படர் கொம்பின்றி யிருத்தலைக் காணப்பெறாத அரசன் இன்று இருப்பானாயின் ஒருதீங்குமறியாத இத்துணை ஆடு கோழிகளை வதைசெய்தலைக் கண்டு அவனது மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை நண்பர்கள் யூகிக்கவேண்டுகிறோம். ஒன்றுக்குமுதவாத புறுவுக்காகத் தன் பொன் மேனியினைத்தையும் அரிந்து கொடுத்த சிபிச்சக்ரவர்த்தியின் சிறப்பை நாம் கேட்டிருக்கிறோம் கேட்டிருந்தென்ன பயன்.

(இன்னும் வரும்)

வெ. சோக்கலிங்க செட்டியார்.
முருகன்மாடம் – முசிறி.

தமிழ் நாடு ஹிந்துஸ்தானி சேவாதளம்

அறிக்கை 3.

அகில இந்திய ஹிந்துஸ்தானி சேவாதளத்தின் விதிகளுக்கிணங்க, தமிழ் நாடு ஹிந்துஸ்தானி சேவாதளத்தின் தொண்டர்களைத் தயாரிக்க 1926-ம் ௵ பிப்ரவரியில் ஒரு தயாரிப்பு முகாம் நடத்த 16-12 25 ல் கூடிய போர்டு கூட்டம் தீர்மானித்துளது. அதன் முதல் வகுப்புக்கு 25 தொண்டர்களை எடுத்து தயாரிக்க எண்ணம். ஆதலால் அந்த அந்த ஜில்லா, தாலூக்கா தொண்டர் போர்டுகள் எத்தனைபெயர் தயாரிப்புக்கு அநுப்பக்கூடும்? அவர்களின் பெயர் சீக்கிரம் மாகாண போர்டுக்கு அனுப்பவேண்டும். அதைக்கொண்டுதான் வகுப்புகள் பிரித்து, முதல் வகுப்பிற்கு இன்னுரென அறிவித்து தருவிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். தயாரிப்பின் முகாம் ஸ்தலம் பாண்டிய மண்டலத்தில் வசதியானஓர் இடமாகும். அதன் குறிப்பும் மற்றும் தயாரிப்புக்கு வரும் தொண்டர்களின் பெயரும் மற்றும் விவரங்களும் சீக்கிரம் பின் வரும்.

தஞ்சை
31-12-25

த. நா நடராஜன்
அமைச்சர்.

மதிப்புரை.

பிரஜாஉற்பத்தியை கட்டுப்படுத்தல்.

தமிழ்நாடு உபபத்திராதிபர் தென்காசி ஸ்ரீமான். ச. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட மேல்கண்ட பெயருடைய ஒரு சிறு புத்தகம் சென்னை N. தண்டபாணி கம்பெனியாரால் வரப்பெற்றோம். அது பிரஜா உற்பத்தியைக்கட்டுப்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றி மிகவும் தெளிவாகவும், பலமேற்கோள்களுடன் தக்க யுக்தி அனுபவமுதலிய சமாதானங்களுடனும் எழுதப்பட்டிருக்கிறது 32 பக்கமுள்ள அழகிய சிறு புத்தகம் விலை அணா ஒன்று. புத்தகம் விற்குமிடம்.

N. தண்டபாணி கம்பெனி,
தபால் பெட்டி 292, 31 பிராட்வே.
மதராஸ்.

ஓம்
வந்தேமாதரம்.

அம்மாபட்டிப்புதூரில் நடைபெற்ற உடுமலைப்பேட்டை தாலூகா இரண்டாவது தேசிய மஹாநாட்டின் வரவு செலவு,

---

வரவு.

நன்கொடையாளரால் வரவு ரூ.	296-0-0
டிக்கட்டு விற்றதில் வரவு ரூ.	12-8-0
சாமான் விற்று வந்ததில் வரவு ரூ.	71-3-0
காரியதரிசி M. P. வேங்கிடசாமி நாயுடுவினால் செலவுக்குப்போகாமல் கையிலிருந்து போட்டது	12-3-0
ஆகவரவு.	391-14-0

செலவு.

கொட்டகை பந்தல் செலவும், வண்டிவாடகை வகைரு செலவும் ரூ.	58-1-6
தந்தி, தபால் செலவு வகைரு ரூ,	4-1-0
சாதல்வார் செலவும், போர்டு வகைரு ரூ,	8-8-0
தலைவர்களின் பிரயாணச்செலவு ரூ.	94-12-6
போஜனச்செலவும், பிரசாரகர் செலவும் வகைரு ரூ.	171-7-0
லைட்டு, மேளம் வகைரு செலவு ரூ.	17-4-0
நோட்டீஸ்கள் வகைரு அச்சுக்கூலி ரூ,	25-12-0
மெடல்கள் வாங்கினதில் செலவு ரூ.	12-0-0
ஆகசெலவு.	391–14–0

M.P. Venkata Sawmi Naidu
Secretary

காலண்டர்கள் வரவு

சென்னை 31 பிராட்வே N. தண்டபாணி கம்பனியாரால் அனுப்பப்பட்ட மிகவும் உபயோகமானதும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருதேதிகள் உள்ளதும் 12 மாதத்திய தமிழ் பஞ்சாங்கமும் திதிவாரம் யோகம் நக்ஷத்திரம் நாள் முதலிய வைகளுடன் எல்லாவித பலாபலன்களும் சேர்த்து அச்சிட்ட மகாத்மா படம்போட்ட ஒரு அழகிய காலண்டர் வந்தனத்துடன் வரப்பெற்றோம்,

ரங்கூன் தென்காஞ்சி சாமிவேல் வைத்தியசாலையாரால் அச்சிடப்பட்ட மிகவும் அழகியதும் 13 பெரியதாள்கள் உள்ளதும் தமிழ் ஆங்கிலம் தேதிகளுள்ளதும் திதிநாள் நட்சத்திரக்குறிப்புள்ளதும் பலவர்ணங்களில் அழகாக அச்சிட்டதுமான ஒரு காலண்டர் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

திருச்சிக்கோட்டை ராஜாவிலாசம்பிரஸ் புரொப்பரைட்டர் ஸ்ரீமான் T. சம்பந்தம்பிள்ளை அவர்களால் அச்சிடப்பட்டதும் ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்கள் படம் அடங்கினதுமான ஒரு அழகிய காலண்டர் தமிழ் ஆங்கிலத் தேதியுடனும் நாள் நக்ஷத்திரக்குறிப்புடனும் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

நாகை ரெயில்வே தொழிலாளர் சங்க (ஆரம்பமுதல்) 1918-௵ ஜூன்-மீ 1-௳ முதல் 1925-௵ ஜூலை-மீ 15-௳ வரையில் வரவு சிலவு கணக்கு.

வரவுகள் விபரம்	ரூ.	அ.	பை
சந்தா வசூல் ரூ. 26123—6—0-க்கு வாபீஸ்ரூ. 2210-6-0 நீக்கி	23913	0	0
பிரவேசக் கட்டணம்	2199	5	2
நன்கொடை ஷாப் வசூல் ரூ 139—12—0			
சேர்த்து	1179	12	0
நாகை முதல் மகாநாடு	667	4	8
போத்தனூர் மகாநாடு	93	0	3
ஷை ஷேக்சர்வர் பண்டு	80	3	0
கைமாத்து (தவணைக்காக)	693	11	11
சகாயநிதி	2655	14	5
உப்பு கணக்கு	4	4	8
நெல் கணக்கு	919	9	6
திட்ட கணக்கு	15	8	0
வாஷிண்டியர் ஆபீஸ்	86	8	0
உருவச்சிலை பண்டு	9	2	6
கணக்கு சுப்பிரமணியம் டிபசிட்	100	0	0
வட்டி	5609	12	9
பிருவிடன்ட் பண்டு	4	0	0
டாக்டர் P வரதராஜலு நாயுடு பண்டு	10	5	2
மகாத்மாகாந்தி பண்டு	26	3	0
ரசீது புஸ்தக வித்து வரவு	10	8	0
ரூல் புஸ்தகம் வித்து வரவு	34	4	6
மதுரை ஸ்திரீ தொழிலாளர் பண்டு	10	14	9
பொருமான கட்டணம்	11	2	6
அபராதம்	18	2	0
ஆக கூடுதல் ரூ.	38352	8	9

பத்துகள் விபரம்	ரூ.	அ.	பை
சிலவு	6839	8	1
நகை யீடு	19338	0	6
காப்பி கிளப்	1269	2	5
கேஸ் கணக்கு	2157	5	1
தவணை கணக்கு	2943	12	0
(பிராது துகை ரூ. 3357-12-0க்கு நாளது வரை பிராது சிலவு வட்டி யுள்பட சேர்த்து வரவேண்டியது ரூபாய் 5317–2–0)			
ஜவுளி கணக்கு	2555	2	11
வருஷக் கொண்டாட்டம்	13	10	6
அரிசிக் கணக்கு	51	2	9
ரொக்க இருப்பு வெ. ப. கடை வசம்	2008	15	7
வசக்கட்டு	14	10	6
சாமான் கொள்முதல்	333	0	6
பலபேர்வழி கணக்கு (கேஸ் கணக்கு ரூ. 480—6—0 காப்பி கிளப் ரூபாய் 102—8—0ம் சேர்த்து ரூ	723	3	0
கை இருப்பு ரொக்கம்	104	15	5
ஆக கூடுதல் ரூ.	38352	8	9

K. C. சுப்பிரமண்யம் பார்-அட்-லா
பிரசிடெண்டு.
D. கிருஷ்ணசாமி பிள்ளை,
காரியதரிசி.
V. P. K. காயாரோகணம் பிள்ளை,
பொக்கிஷதார்.

நவசக்தியும் பிராமணரல்லாதாரும்

"திராவிடன்" எழுதுவதாவது:—

இத்திங்கள் முதல் நாள் வெளிக்கிளம்பிய "நவசக்தி" பிராமணரல்லாதார் இயக்கத்தைக் குறித்துப் பழைய "தேசபக்தன்" பாடத்தை அப்படியே படித்துள்ளாள். அவள் முதலாவதாக,

"அவ்வியக்கம் பிராமணரல்லாதார் இயக்கமெனச் சொல்லப்படுவதற்குப் பொருளில்லை. அவ்வியக்கம் பிராமணரல்லாதார் இயக்கமாயின், எல்லாப்பிராமணரல்லாதார் கொள்கைக்கும் ஆஃதிடங்தந்து நிற்றல் வேண்டும். சில பிராமணரல்லாதார் கூடித் தமக்கென ஒரு திட்டங்கோலிப் பல பிராமணரல்லாதாரோடு பிணங்கிப்போராடுவது எங்ஙனம் பிராமணரல்லாதாருக்கு நலன் நாடுவதாகும்? பிராமணரல்லாதாருக்குள் பிரிவை உண்டுபண்ணும் ஓர் இயக்கத்தைப் பிராமணரல்லாதார் இயக்கமென்று கூறுதற்குப் பொருளுமுண்டோ"?

என்று வினவுகின்றாள். நம் கட்சியில் எல்லாப் பிராமணரல்லாதாரும் சேர்ந்துள்ளாரென நாம் ஒரு நாளும் பறையடித்தோமல்லோம். ஒரு சிலர் பிராமணக்கட்சியில் இருப்பதை நாம் அறிவோம். எல்லாப் பிராமணரல்லாதாரும் சேராத இயக்கத்துக்குப் பிராமணரல்லாதார் இயக்கம் என்ற பெயர் எவ்வாறு பொருந்தும் என்று கூறும் நவசக்தியை எல்லா இந்தியர்களும் சேராத ஒரு கழகத்துக்கு "இந்தியன்நாஷனல் காங்கிரஸ்" என்ற பெயர் எவ்வாறு பொருந்தும் என்று நாம் கடாவுகின்றோம். இக்காங்கிரசில் கலவாது மிதவாதிகளும் முஸ்லீம் லீக்கைச்சார்ந்த முசல்மான்களும், பிராமணரல்லாதார்களும், பலர் இருக்கிறார்கள். இவ்வுண்மையை "நவசக்தியும் அறிவாள்.

இனி "நவசக்தி" சென்னைமாகாணச் சங்கத்தைக் குறித்துப் பெருமை பாராட்டிப் பேசுகின்றாள். "காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல், அவள் கூட்டத்தார் பெற்ற சங்கத்தை அவள் பாராட்டாதிருக்க முடியுமா? சென்னை மகாணச் சங்கம் பிராமணரல்லாதார் தோலை மேலே பூண்ட பிராமணச்சங்கம் என்று நாம் அது தோன்றிய காலத்திலேயே எழுதியிருக்கின்றோம். ஏனெனின் அச்சங்கம் கேட்ட வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்துக்கும், நம் சங்கமாய் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் கேட்ட வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்துக்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. நம் சங்கம் முஸ்லீம் லீக்கைப்போன்று பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரித் தொகுதியின் வாயிலான் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் (Communal representation through Communual electorates) கேட்டது. அத்தகைய வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தைக் கொடுத்துவிட்டால் சட்டசபையில் பிராமணர்கள் தொகை குறைந்துவிடுமே என்று, அஞ்சிப் பிராமணர்கள் வலைக்குட்பட்ட சில பிராமணரல்லாதார் சென்னை மகாணச் சங்கத்தின் வாயிலான் சட்டசபையில் சில இருக்கைகள் மட்டும் பிராமணரல்லாதாருக்கு ஒதுக்கிக் கொடுத்தால் போதும் என்று பார்ளுமன்றத்துக் கூட்டுக்கமிட்டியார் முன்எடுத்துரைத்தார்கள். ஆகவே இரு சங்கத்தாருக்கும் குதிரைக்கும், கழுதைக்குமுள்ள வேற்றுமையுண்டு. சென்னை மாகாணச்சங்கம் தோன்றியிராவிடின், நமக்கும் முசல்மான்களைப் போன்று வகுப்புவாரிப்பிரதிநிதித்தும் கட்டாயம் கிடைத்திருக்கும். நாம் கோரியது கிடையாதவண்ணம் தடை செய்வதற்காகச் சென்னை மாகாணச் சங்கம் தோன்றியதினாற்றான். அச்சங்கம் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்குப்பின்பு அழுவாரொருவரின்றி இறந்து போய்விட்டது.

"காஞ்சி மகாநாட்டின் நடை முறையைப்பற்றிச் சிலர் பேசிவரும் பேச்சுகளும் எழுதிவரும் எழுத்துகளும் நமது கருத்தை இத்துறையில் ஈர்த்து நிற்கின்றன. என் செய்வோம்" என்று "நவசக்தி" கைவிரிக்கின்றாள், ஆகவே "நவசக்தி" க்கு உண்மையாய்ப் பிராமணரல்லாதார் இயக்கத்தைக் கண்டிக்க விருப்பமில்லை; அதைப் போற்ற வேண்டுமென்ற பேரவாவே உள்ளத்தில் இருக்கின்றதென்பது வெளிப்படை. ஆ! அவள் பிராமணரல்லாத வகுப்பைச் சார்ந்த பெண்ணன்றோ! காஞ்சிபுர மகாநாட்டைக் குறித்துச் சிலர் பேசிவரும் சொற்களும், எழுதிவரும் எழுத்துக்களும் பிராமணரல்லாதார் இயக்கத்தைக் கண்டிக்கத் தூண்டியதெனின், வெறுப்புக்காரணமாய் எழுந்த இவள் கண்டனத்தில் உண்மையைக் காண்டல் எவ்வாறு இயலும்.? எனவே இதைப் பிராமணரல்லாதார் புறக்கணித்துவிட விரும்புகின்றோம் ஏனெனின் வெருப்பு ஆறியதும் "நவசக்தி" தன்னுணர்ச்சி பெற்றுவிடுவாள்.

"நவசக்தி" திரு யாதவர் "தம்மை ஆரியரென்றே கருதிப் பேசியிருத்தல் கவனிக்கத் தக்கது" என்று குறிப்பிடுகின்றாள் அவர் தம்மை ஆரியர் என்று யாண்டும் குறிப்பிட்டிருக்கின்றாரல்லர். அவர் விந்திய மலையைக்குறித்தும் அகத்தியர் திருவிளையாடலைக்குறித்தும் தம் முன்னுரையில் எழுதியிருப்பதை "நவசக்தி" படிப்பாளாயின், தன் குற்றத்தைத்தானே உணர்ந்து நாணுறுவாள். இவ்வாறே பிழைபட்டவுரைகள் பல "நவசக்தி" வரைந்திருக்கின்றாள். அவைகளைக் குறித்து எழுதப் புகுவது கற்சோற்றில் கல்லாய்வதையொக்கும்.

அவிநாசியில் கோவை ஜில்லா செங்குந்தர் மகாநாட்டில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தின் சாரமாவது.

நமது நாட்டில் செங்குந்தர் குலமானது தக்க பெருமையுடனும், செல்வாக்குடனும் இருந்து வருகிறது. ஆனாலும் அதில் பெண்களை கோவில்களின் பேரால் பொட்டுக்கட்டி தாசி வேசித் தொழில் செய்ய அனுமதிப்பதால் அக்குலத்திற்கு ஒரு இழிவு இருக்கிறது என்பது மறைக்க முடியாத காரியமானாலும், இச்சங்கம் ஏற்பட்ட சென்ற 10 வருஷங்களுக்குள்ளாக எவ்வளவோ சீர்திருத்த மடைந்து விட்டது இவ்வளவு தூரம் முன்னேற்றமடையும் படியான காரியம் வேறு எந்தகுல சங்கமும் செய்யவேயில்லை. இக்குல முன்னேற்றத்திற்கு இச்சங்கத்தின் மூலமாய் பல குலாபிமானிகள் உண்மையில் பாடுபட்டதனால் தான் இந்தயோக்கியதைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனாலும் இதுமாத்திரம் போராது. இக்குலத்தின் சிலஆண்களிடமும் உள்ள சில குறைவுகளையும் சீர்திருத்தம் செய்யவேண்டும். அதாவது நமது நாட்டில் இக்குலத்தாரில் சிலர் மேளம் வாசிக்கும் தொழிலை ஜீவனமாயக் கொண்டிருப்பதால் ஒருகுறைவான பெயர் இருந்துவருகிறது. இத்தொழின்காரணமாகவே ஆண்கள் சுயமரியாதையை கவனிக்காமல் தங்களுக்குள்ளாகவே சிலர் தங்களை தாழ்ந்தவர்களாகக்கருதிக்கொண்டு மிகவும் ஒடுங்கியும் பதுங்கியும் நடந்து கொள்கிறார்கள் என்றும் மணி ஒன்றுக்கு 100 ரூ. பெறக்கூடிய நாகசுர வித்துவானும் சபைகளில் சங்கீதஞானமே இல்லாத ஒருதற்குறியைக்கண்டாலும் அனுமார் போல் ஒடுங்குவதும் கும்பிடுவதும் தனது குலதர்மம் என்று எண்ணுகிறார் என்றும் தேவகோட்டையில் ஒரு ஊர்வலத்தில் 350 ரூபேசி நாகசுரம் வாசிக்கவந்த ஒரு நாகசுரகாரர்வேர்வையை துடைக்க தனது தோளின்மேல் ஒருசிறு துணியைபோட்டுக்கொண்டு வாசித்ததில் அந்த மேல் துணியை எடுக்காமல் வாசிக்கக்கூடாது என்று அவ்வூரில் சிலர் சொன்னார்கள் என்றும், சங்கீதம் கேழ்க்க 350 ரூபாயும் 2-வது வகுப்பு படியும் கொடுத்த ஒரு வித்வானை தோளில் துண்டு போட்டுக்கொண்டு கூட வாசிக்கக் கூடாது என்று சொல்லும்போது நமது பிரபுக்கள் சங்கீதத்தை எவ்வளவு மதிக்கிறார்கள் என்பது தெரிகிறதென்றும் ஆதலால் அத்தொழிலை விட்டுவிடவேண்டுமென்றும் சங்கீதத்திற்கு யோக்கியதை வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றும், நமது ஜனங்களுக்கு இன்னமும் பகுத்தறிவு கிடையாது என்றும் உதாரணமாகஒரு பிராமணன் ஒத்து ஊதினாலும் ஒருதாசிக்கு பின்னின்றுகொண்டு ஆர்மோனியம் மீட்டினாலும், நட்டுவாங்கம் செய்தாலும் அத்தாசிக்கு ஒரு நாயகனைப்பிடித்துக்கொடுப்பதற்கு தூது நடந்தாலும் அவனைப்பார்த்து சுவாமி என்றுதான் கூப்பிடுகிறார்கள். தூதுக்கடிதம் வாங்கும்போதே எழுந்து நின்றுதான் வாங்குகிறார்கள் என்றும் ஆதலால் இவ்வறியாமை நிலைமையிலுள்ள ஜனங்கள் முன்னிலையில் வித்வானாயிருந்து மேளக்காரன் என்கிற பெயர் வாங்குவதைவிட வீதியில் கல்லுடைத்தோ, தெருக்கூட்டியோ முதலியாராய் வாழ்வது மேலென்றும், அல்லாமலும் சுபாவத்திலேயே நமக்கு ஆண்மைத்தனம் வேண்டுமென்றும், அனாவசியமாய் நாம் தாழ்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு ஒருவரைக் கும்பிடக்கூடாது என்றும், பிராமணர்கள் முதலியவர்கள் நமக்கு மேலான ஜாதி என்று எண்ணுவதே பெரிய நரகமென்றும்,

பிராமணனுக்குப் பணம் கொடுப்பதால் நமது பாவம் போய்விடுமென்பதும், பிராமணனுக்குப் பணம் கொடுப்பதால் தமது பெற்றோர்கள் மோக்ஷத்திற்கு போவார்களென்பதும், அவர்கள் படுக்கை விரித்தால் தான் நல்ல சந்தானம் உண்டாகுமென்பதுமாகிய எண்ணங்கள் தான் நமது சுயமரியாதையை கெடுத்துவிடுகிறதென்றும் அதோடு நமக்குத்தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணுவதே அடிமை மனப்பான்மைக்கு அஸ்திவாரம் என்றும், நமக்கு கீழ் ஒருவரில்லை என்று உண்மையாய் நினைப்போமானால் நமக்கு மேலாக ஒருவன் இருக்கவேமாட்டான் என்றும், நாம் அவற்றைக் கவனியாமல் நமக்கு உதவி செய்பவர்களையும், பல வழிகளிலும் நன்மை செய்கிறவர்களையும், நம்மை பரிசுத்தமான காற்றை சுவாசிக்கும்படி செய்பவர்களையும், சாதுக்களையும் நமக்கு கீழானவர்கள் என்று எண்ணின குற்றத்தின் கருமபலன் தத்துவத்தில் நம்மைவிட ஒரு விதத்திலும் மேலான யோக்கியரல்லாதவர்களும், கீழ்மக்களும் நமது இரத்தத்தை உறிஞ்சியே ஜீவனம் செய்ய வேண்டியவர்களும், நமக்கு மேலான ஜாதியாரென்றும் அவர்களை வணங்கவேண்டியது நமது மோக்ஷ சாதனமென்றும், நினைக்கும்படி செய்துவிட்டது. இக்குறைகள் நீங்கின நிலைதான் சமத்துவமென்பதும், சமூக முன்னேற்றமென்பதும் என்பதாக நான் நினைக்கிறேன் என்றும் சொன்னார். பின்னர் அக்கிராசனாதிபதி முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

தமிழ் மாகாண கோ–வம்சத்தினரின் (கோவில் பண்டாரங்கள்) இரண்டாவது மகா நாடு

நாளது தை மீ 11, 12, (1926 ஜனவரி 24, 25,) தேதி ஞாயிறு திங்கள் கிழமைகளில் கொடுமுடி மகுடேஸ்வர சுவாமி கோவிலுக்குப் பக்கத்திலுள்ள சத்திரத்தில் காரமடை ஸ்ரீமான். N. கருப்பண்ண பண்டாரம் அவர்கள் தலைமையின் கீழ் தமிழ் மாகாண கோவம்சத்தினரின் 2–வது மகாநாடு நடைபெறும்:—

அதே சந்தர்ப்பங்களில் ஸ்ரீமதி. லக்ஷ்மி அம்மாள் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீகள் மகாநாடும், ஸ்ரீகணபதி அக்ராசனத்தின் கீழ் மாணவர்கள் மகாநாடும் நடைபெறும். பல விடங்களிலிருந்தும் அநேக பிரபலஸ்தர்கள் விஜயம் செய்வதாய் வாக்களித்திருக்கிறார்கள். ஆதலால் எல்லா குலாபிமானிகளும் இதர சமூக கனவான்களும் அவசியம் விஜயம் செய்ய வேண்டுமாய் வேண்டப்படுகிறார்கள்:—

கொடுமுடி வரவேற்பு கமிட்டியார்

நமது குறிப்பு:—

நமது தாலூக்காவில் உள்ள சைவப் பண்டாரங்களின் முக்கிய கூட்டமிதுவாகையால், இத்தாலூக்கா வேளாள சமூகத்தார் அனைவரும் விஜயம் செய்து அவர்கள் முன்னேற்றத்துக்கான காரியங்களை அறிவுறுத்தி அச்சமூகம் முன்னேற்றமடைய உதவி செய்யவேண்டியது, முக்கியமான கடமை. ஏனெனில் அவர்கள்தான் பெரும்பாலும் நமது கிராமதேவதைகள் முதலிய கோவில்களில் பூஜைசெய்பவர்களாகவும், தவசிப்பிள்ளைகளாகவும் புஷ்பம் தொடுப்பவர்களாகவுமிருப்பதால் அவசியம் அவர்கள் முன்னேற்றத்தையும் ஒழுக்கவழக்கங்களையும் சீர் திருத்தம் செய்யவேண்டியது குடிமக்கள் கடமையாகும்.

பத்திராதிபர்.

ஸ்ரீமான் R வீரய்யன் கிராமப் பஞ்சாயத்து சட்டத்திற்குதிருத்தம்

நீண்டாதார் வகுப்புப்பிரதிநிதியாய் சர்க்காரால் நியமிக்கப்பட்ட சட்டசபை மெம்பரான ஸ்ரீமான். ஆர். வீரய்யன் அவர்கள் சென்னை கிராமப்பஞ்சாயத்து சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவரப்போவதாக சட்டசபைக்கு ஒருமுன்னறிக்கை அனுப்பியிருக்கிறார். அதாவது அச்சட்டத்தின் ஒருபாகத்தில் கிராமப்பஞ்சாயத்து மெம்பர்கள் ஸ்தானத்திற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பாரிலிருந்து சில பிரதிநிதிகளை சர்க்கார் நியமிக்கவேண்டும் என்கிற வாக்கியத்தைச்சேர்த்துக்கொள்ளும்படி அதில் எழுதியிருக்கிறார்.

அதற்கு அவர் காரணம் சொல்லுகையில் தேர்தல்கள் மூலமாக நீண்டாதார் என்போர்கள் ஸ்தானம் பெற முடியாமலிருக்கிறபடியால் முனிசிபாலிட்டி ஜில்லா தாலூகா போர்டுகள் போல் கிராமப்பஞ்சாயத்து சபைக்கும் நீண்டாதாருக்கும் சர்க்கார் நியமனம் கிடைத்தால் அல்லாமல் ஸ்தானம் பெற முடியாததலால் சட்டத்தில் இவ்வித திருத்தம் இருக்கவேண்டியதுடன் அவசியமாகிறது என்று எழுதுகிறார்.

நமது குறிப்பு.

இவற்றை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். புருஷன் பெண்ஜாதியாய் வாழுகின்றவர்களே புருஷன் சரியானபடி பெண்ஜாதியை ஆதரிக்காவிட்டால் சர்க்காருக்கு போவதையும் தகப்பன் பிள்ளை சர்க்காருக்கு போவதையும் அண்ணன் தம்பி சர்க்காருக்கு போவதையும் நாம் தினம்அனுபவத்தில் பார்க்கிறோம்.

அதற்காகவேண்டித்தான், மனிதர்களுக்கு சர்க்கார் என்பது கடவுளால் அளிக்கப்பட்டிருக்கிறது. நமது துர்அதிர்ஷ்ட வசமாய் தற்காலம் நமக்கு இருக்கும் சர்க்கார் நமது நன்மைகளைவிட தங்கள் நன்மையே பிரதானமாகக் கருதுகிற ஒரு வியாபாரக் கூட்டத்தாராய் போய் விட்டபடியால், தொட்டதற் கெல்லாம் இம்மாதிரி சர்க்காரிடம் போகலாமா என்கிற ஒரு ஞானம் சிற்சில சமயங்களில் தோன்றுகிறது. ஆனாலும் மகாத்மாவே இனி கொஞ்ச காலத்திற்கு தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று அலுத்துப்போனபிறகு தற்கால நிலைமையில் ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும், பலக்குறைவுள்ளவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சர்க்கார் தவிர வேறு கதி என்ன இருக்கிறது? ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் போன்றவர்களுக்கு தற்சமயம் சர்க்கார் தயவு வேண்டியதில்லை. ஏனென்றால் கொஞ்ச நாளைக்கு முன்பாக சர்க்காருக்கு அனுகூலமாய் இருந்து, மகாத்மா காந்தியைக்கூட ஜெயிலுக்கு பிடிக்கும்படி யோசனை சொல்லி, சர்க்கார் தயவுபெற்று உயர் பதவியும், உத்யோகமும், பணமும், ஆள்களும் நிறையசம்பாதித்துக் கொண்டாய்விட்டது. தங்கள் பதவிகுறையாமல் இருப்பதற்கு அநுகூலமாய், நீண்டாதார் முன்னேற்றமடைய கேள்க்கும், வகுப்புவாரி உரிமையை எதிர்க்க ஸ்ரீமான். ஜயவேலுபோன்றவர்களையும், கிருஸ்தவர்கள் வகுப்புவாரி உரிமை கேட்பதை எதிர்க்க ஸ்ரீமான் குழந்தை போன்றவர்களையும், மகமதியர் வகுப்புவாரி உரிமைகள் கேட்பதை எதிர்க்க ஜனாப்கள் ஷாபிமகமது, அமீத்கான் போன்றவர்களையும், பிராமணரல்லாத இந்துக்கள் வகுப்புவாரி உரிமை கேட்பதைஎதிர்க்க ஸ்ரீமான் திரு. வி. கல்யாண சுந்திர முதலியார் போன்றவர்களையும், அடைந்திருப்பதால்அவருக்கு கவலை யில்லை. ஆனாலும், இந்நான்கு வகுப்பார்கள் தங்கள் தங்கள் வகுப்புக்கென்று கூட்டும் வகுப்பு மகாநாடுகளில் தங்கள் சுதந்தரங்களைக்காக்க சர்க்கார் தயவைத்தான் நாடுகிறார்கள்.

நீண்டாதார் வகுப்பு மகா நாட்டிலும், மகமதியர்கள் மகாநாட்டிலும், மற்றும் பிராமணரல்லாத மகாநாட்டிலும் உரிமை தனித்தேர்தல் மூலமானாலும், ஒதுக்கிவைப்பதான் மூலமானாலும் பெறவேண்டுமென்று கேட்பதெல்லாம் சர்க்காரிடம் தானே ஒழிய,வேறு ஒருவரையுமல்ல. வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் வேண்டும், வேண்டாம் என்பதும் அந்தந்த வகுப்பு மகாநாடுகளுக்குத்தான் பாத்தியப்பட்டதே தவிர, ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரால்சுவாதீனப்படுத்திக் கொண்ட தனிப்பட்ட ஒரு சிலர்களுக்கு அல்ல. ஆதலால் ஸ்ரீமான் வீரய்யன் கேட்கும் உரிமை மிகவும் நியாயமானதென்றும், அது தான் அவ்வகுப்பாரின் அபிப்பிராயமே தவிர காங்கிரசிலிருக்கும் ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்கள் அபிப்பிராயம் அவ்வகுப்பார் உடையது அல்லவென்றும், ஆதலால் சட்டசபையில் இருக்கும் பிராமணரல்லாதார் யாவரும் இதை ஆதரித்து அவ்வகுப்புக்குண்டானநியாயமான உரிமையை அளிக்க தாங்கள் தயாராயிருப்பதாகவும் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இம்மாதிரி நாம் ஒவ்வொரு வகுப்பாரின் உரிமைகளையும் அவர்களுக்கு அளித்து எல்லோரும் சமம் என்கிற தத்துவத்தை முதலில் நிலை நிறுத்தி விட்டோமானால், நமது சர்க்கார்கூட தமது வியாபார தந்திரத்தை விட்டுவிட்டு யோக்கியமாய் நடந்துகொண்டாலொழிய இந்தியாவில் வாழமுடியாது என்று நினைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தி விடலாம். ப–ர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-௵ மார்கழி-௴ ௨௭-உ

கான்பூர் தேசீய காங்கிரஸ் தீர்மானம்.

கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி தேசியப் பத்திரிக்கைகளென்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பத்திரிக்கைகளெல்லாம், "கங்காதரா மாண்டாயோ! கங்காதரா மாண்டாயோ"!, என்கிற கதைபோல் ஒரே மூச்சாக கொஞ்சமும் விசாரிக்காமலும், யோசனையின்றியும் "நல்ல தீர்மானம்!, நல்ல தீர்மானம்!" என்றே எழுதிக்கொண்டு வருகின்றன. பொது ஜனங்களும் இவற்றைப்பற்றிச் சரிவரச் சிந்திக்காமல், பத்திரிக்கைகளை நம்பியே ஏமாந்து போகிறார்கள். காங்கிரஸ் தீர்மானத்தின் முக்கிய தத்துவங்களெலலாம் இரண்டு, மூன்று விஷயங்களிலேயே அடங்கிப்போயிருக்கிறது. அதாவது, சட்டசபைகளைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டியது; அதற்காகக் காங்கிரஸ் பணத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது, சட்டமறுப்புத்தான் நல்ல ஆயுதம்; ஆனால் தேசம் அதற்கு லாயக்கில்லை. நிர்மாணத்திட்டத்தைப் பொது ஜனங்களைய நிறைவேற்றிவைக்கச் சொல்லிவிட வேண்டியது. சர்க்காரை இறுதியாகச் சில விஷயங்களைக் கேட்பது, அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் சட்ட சபைகளை விட்டு விலகிவிடுவதுமான விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சட்டசபை செல்லும் நோக்கத்துடன் ஸ்ரீமான். தாஸ் தலைமையாகயிருந்து, காங்கிரசுக்கு விரோதமான பிரசாரம் செய்து வரும் காலத்திலேயே சட்டசபைப் பிரவேசம் தேசீய விடுதலையை அளிக்காது தேசீய ஒற்றுமையை குலைக்கும் என்பதாக நாம் ஆட்சேபித்த காலத்தில் பல காரணங்கள் சொன்னோம். அதாவது, பல காரணங்களால் சட்டசபையில நமக்கு யோக்கியமான மெஜாரிட்டி கிடைக்காதென்றும், ஒருசமயம் கிடைத்த போதிலும் அதனால் தேசத்திற்கு பிரயோஜனத்தை அளிக்கக்கூடிய மாதிரியில் ஒருவேலையும் செய்துகொள்ளமுடியாதென்றும், சொல்லிவந்தோம். சென்ற தேர்தலில் சுயராஜ்யக்கட்சியார் சட்டசபைக்கு நின்றார்கள்; சில ஸ்தானங்களையும் கைப்பற்றினார்கள்; சிற்சில மாகாணங்களில் "மெஜாரிட்டி" அடைந்தார்கள்; தங்களுடைய தீர்மானங்களையும் நிறைவேற்றினார்கள்; இதன் மூலம் நாட்டிற்கு என்னபலன் உண்டாயிற்று? அலக்ஷியம் செய்யப்பட்டுக் கிடந்த பதவிகளில் மோகம் உண்டாகவும், ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை உண்டாகவும், சர்க்காரரையே பயந்து நடுங்கும்படியாய் செய்த ஒத்துழையாமைத்தத்துவம் ஒடுங்கவும், மகாத்மாகாந்தியும், மற்றும் பலதீவிர தேசத்தொண்டர்களும், காங்கிரசில் ஒருவேலையும் செய்யமுடியாமல் காங்கிரசை விட்டு விலகியிருக்க வேண்டியதுமான நிலைமையுமேயல்லாமல் வேறென்ன செய்ய முடிந்தது?

சட்டசபையில் ஒத்துழையாமைசெய்வதென்றும், முட்டுக்கட்டை போடுவதென்றும் சொல்லிப்போன சுயராஜ்யக்கட்சியார், மிதவாதிகளோடு சேர்ந்துகொண்டு,சர்க்காரை சீர்திருத்தம் கேட்கவும்அதைப்பற்றிவிசாரிப்பதற்காக ஒரு கூட்டத்தையும்,ஒருகமிஷனையும் நியமிக்கும்படி சர்க்காரைக் கேட்கவும், சர்க்காரின் ராஜீயபாரத்திற்கு அநுகூலமாக அவர்களுக்கு யோசனை சொல்லுவதற்கு, அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளில் அங்கம் பெறவும், இந்திய சட்டசபையை ஒழுங்காய் நடத்திக்கொடுப்பதற்காக, சர்க்காரால் சம்பளம் கொடுக்கப்பட்ட உத்தியோகமாகிய அக்ராசனாதிபதி பதவிகளை ஏற்றுக்கொண்டு சர்க்கார் சட்டசபையை ஒழுங்காய் நடத்திக்கொடுக்கவும் மாத்திரம் முடிந்ததேயல்லாமல், வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது?மாகாண சட்டசபைகளிலும், கல்கத்தா, மத்தியமாகாணம் ஆகிய இரண்டிடங்களில் மெஜாரிட்டியும் பெற்றார்கள். மந்திரிகள் சம்பளத்தை நிராகரித்தார்கள்; குறைத்தார்கள்; மந்திரிகளும் எடுபட்டார்கள்; தங்களுக்கு அநுகூலமான பல தீர்மானங்களையும் செய்தார்கள். இவ்வளவும் செய்து என்னபயன்? ஒரு மயிர்க்காலளவு சர்க்காரின் அக்கிரமமான ஆதிக்கத்தை அசைக்க முடிந்ததா? வங்காளத்தில் நிராகரித்த சம்பளத்தை சுயராஜ்யக்கட்சியார் தாங்களே மறுபடியும் அநுமதிக்க நேர்ந்தது. மத்திய மாகாணத்தில், குறைக்கப்பட்ட மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும், சுயராஜ்யக்கட்சியாராலேயே உயர்த்த நேர்ந்தது. மற்ற மாகாணங்களைப்பற்றியோ என்றால், பிராமணர்—பிராமணரல்லாதார் சண்டையும், இந்து—முஸ்லீம் சண்டையும் பலப்பட்டது. ஓர் காலத்தில் கதர் மயமாகயிருந்த மகமதியர்கள் இன்றையத்தினம் கதரென்றால், அது ஓர் மதவிரோதமான சின்னமென்று கருதுகிறார்கள். காங்கிரஸ் தங்கள் நன்மைக்கு மிகவும் ஆதாரமானதென்று, நினைத்த பிராமணரல்லாதார்கள், இன்றையத்தினம் காங்கிரஸ்,பிராமணர் ஆதிக்கங்களுக்கு அநுகூலமானதென்று; பெரும்பான்மையான பிராமணரல்லாதார் நினைக்கிறார்கள். மங்கி புகைந்துகொண்டிருந்த ஜஸ்டிஸ்கட்சி, துலக்கம் செய்யப்பட்டு,இந்தியா முழுமையுமே பற்றிக்கொண்டது. ஒத்துழையாமையின் பொருட்டு, உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத்தயாராயிருந்த தொண்டர்களில் பெரும்பாலோர், இன்றையத்தினம் வயிற்றுக்கொடுமைக்காக தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக் கூலிக்கு எலெக்ஷன் வேலை செய்ய நேர்ந்துவிட்டது இவ்வளவு காரியங்களைச் சட்டசபைப்பிரவேசத்தின் மூலமாக நன்றாய் அறிந்துவிட்டு, மறுபடியும், சட்ட சபைக்குக் காங்கிரஸ்காரர்கள் போகவேண்டுமென்றும்,காங்கிரஸ் பணம் அதற்காக செலவுபண்ணவேண்டுமென்றும், காங்கிரஸ் ஸ்தாபனங்கள் அதற்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் காங்கிரஸ் தீர்மானிக்குமானால், தேசத்திலுள்ளவர்களுக்குக் காங்கிரஸினிடம் எப்படி மதிப்பு வரும்? இந்த மாதிரி அடுத்த வருடமும் தேர்தல்களில் சட்டசபைக்கு நின்று, ஸ்தானங்கள் பெற்று, இன்னுங்கொஞ்சமதிகமாகவே ஜெயம் பெறுவதாகவே வைத்துக்கொண்டாலும், சட்டசபைகளில் இதை விட வேறுஎன்ன வேலை செய்யக்கூடும்? இந்த வேலையையே, திரும்பத் திரும்பச் செய்துகொண்டு வருவதில் தேசத்துக்கு என்ன பலன் விளையும்? நிர்மாணத் திட்டத்தைப்பற்றி, கொஞ்சங்கூட கவலை இல்லாத மாதிரியில் காங்கிரஸ் ஓர் தீர்மானம் செய்திருக்கிறது. அதாவது, நிர்மாணத்திட்டத்தை ஜனங்களே நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. ஜனங்கள் நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றிவைப்பதற்கு காங்கிரஸ் எதற்காகயிருக்கவேண்டும்? காங்கிரஸ் பணமெல்லாம் சட்டசபைத் தேர்தலுக்குச் செலவழிக்கப்படவேண்டும், காங்கிரஸ்காரர்கள்; இவ்வருஷம் பூராவும் எலெக்ஷன் வேலையாய் இருக்கவேண்டும், நிர்மாணத்திட்டங்களை ஜனங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும், என்று தீர்மானிப்பதில் எவ்வளவு மோசமிருக்கிறதென்பதைப் பொது ஜனங்கள் நன்றாய் அறியவேண்டும். காங்கிரஸ் பிரசாரமில்லாமலும், காங்கிரஸ்தொண்டர்களின் கட்டுப்பாடான வேலையில்லாமலும் நிர்மாணத்திட்டம் எப்படி நிறைவேறும்? கதர் வேலை ஒன்றுமாத்திரம் மகாத்மா காந்தி ஏற்றுக்கொண்டார். மற்றப்படி மதுவிலக்கு, தீண்டாமைவிலக்கு, பல வகுப்பு ஒற்றுமை முதலிய காரியங்கள் தேசத்தில் ஏற்படாமல், சுயராஜ்யம் எப்படி ஏற்படும்? இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு சட்ட சபைக்குப் போவதை மாத்திரம், காங்கிரசின் நேரான வேலையாய் வைத்துக்கொள்ளுவதினால்,படித்தவர்களுக்குச் சில வேலையும், பதவியும், சம்பளமும் கிடைக்குமேயல்லாமல்,ஏழை ஜனங்களுக்கு—பொது ஜனங்களுக்கு—தொழிலாளருக்கு-என்ன பலன் உண்டாகும்? ஆனதால் தேச நன்மை

க்கு இம்மாதிரி காங்கிரஸை எதிர்பார்ப்பதுபோல் பைத்தியக்காரத்தனமான காரியும் வேறொன்றுமில்லையென்பதே நமது அபிப்பிராயம். இனி காங்கிரசின் யோக்கியதை, பழைய காலப்படி, உத்தியோகங்களை உற்பத்தி பண்ணவும், கோர்ட்டுகளை உற்பத்தி பண்ணவும், அதற்கேற்ற படிப்பான பள்ளிக்கூடங்களை உற்பத்திபண்ணவுமான, காரியத்தைச் செய்யக்கூடியதாயும், காங்கிரஸ்காரர் இதற்காகசட்டசபைமுதலிய தேர்தலில் ஜெயம்பெறவேண்டியதாயும், இருக்குமேயல்லாமல் வேறொரு காரியத்திற்கும், உபயோகப்படமுடியாது. இக்காரியங்களால் குடியானவர்களுக்கு இனியும் வரி அதிகமாக உயரப்போகிறது.தொழிலாளிகளுக்குஇனியும் வேலையற்று,தரித்திரம் அதிகமாகப்போகிறது. கோர்ட்டுகளுக்கும், வக்கீல்களுக்கும் வேலை ஏற்படுவதற்காக வேண்டி, மதுபானத்தை அதிகப்படுத்த வேண்டியதாய்ப் போகிறது; பிராமணர்கள் தங்களுடைய செல்வாக்கினாலும், சர்க்காருக்கு இரகசியமாய் நன்மை செய்வதன்மூலமாகவும், தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ள வழி ஏற்படப்போகிறது. இதன்பலனாய், தீண்டாமையும், பிறவியில் உயர்வு, தாழ்வும், நிலைத்து நிற்கப்போகிறது. இம்மாதிரியான பலன்களைத்தரத்தக்கதான காங்கிரஸ் தீர்மானங்களை நல்லதீர்மானம் என்று சொல்லிக்கொண்டு பத்திரிக்கைகளால் பிழைக்க வேண்டியவர்களும்; ராஜீய விஷயங்களின் பேரால்பிழைக்கவேண்டியவர்களும்; பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். இந்நிலையுள்ள காங்கிரசினாலும் அதன் தற்கால தீர்மானங்களினாலும் இந்தியாவிற்கு எந்தவழியிலேயும், உண்மையான சுயராஜ்யம் கிடைக்காது என்பதே நமது முடிவான அபிப்பிராயம்.

உத்தியோக ஆசையுள்ளவர்கள் போக, காங்கிரஸ் பெயரால் பிழைக்க வேண்டியவர்கள் போக, மற்றவர்கள் தங்கள் சமூக நன்மைக்கும், தேசநன்மைக்கும், நிர்மாணத்திட்டங்களை நிறை வேற்றுவதற்கும்,இம்மாதிரி காங்கிரசையே நம்பியிராமல்,நூற்போர் சங்கம் போலவேறுபல ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்துகொண்டு,அதன் மூலமாக உழைக்கவும், சட்டசபையின் மூலம் இவற்றிற்கு ஏதாவது கொஞ்சம் நஞ்சம் அனுகூலம் தேடிக்கொள்ளலாம் என்கிற மனச்சாக்ஷியுள்ளவர்கள், அந்தந்த ஸ்தாபனங்கள் மூலமாகவே சட்டசபைக்குச் செல்வதுமான காரியங்களைச் செய்வதும் தான் தேசமுன்னேற்றத்துக்கான காரியமென்பது, நமது அபிப்பிராயம்.

மகாத்மாகாந்தி அவர்களும், கொஞ்சகாலம் பொறுத்தாவது காங்கிரசைத் தமது வழிக்கு,அதாவது, தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் சம்பாதித்துக் கொடுப்பதற்கான வழிக்கு மறுபடியும் கொண்டுவரக்கூடுமென்று நினைப்பதும், அது வரையில் மேற்கண்ட காரியங்களை அடியோடு விட்டுவிடாமல் தனி இயக்கப் பொறுப்பிலாவது செய்து கொண்டு வரவேண்டுமென்பதும் நமது அபிப்ராயத்துக்கு ஆதரவளிப்பதெனக்கருதுகிறோம்.

சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டதினாலேயே கலியாணம் நின்று போகுமா?

நமது “குடி அரசு” ப்பத்திரிகைக்கு விரோதமாக சில பிராமணர்களும், பிராமணரல்லாத சில வாரப்பத்திராதிபர்களும், வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்படும் சில காங்கிரஸ் தொண்டர்களென்போருக்குப் பணம் கொடுத்தும், தங்களுடைய வாரப்பத்திரிக்கைகளை இலவசமாக அனுப்பிக்கொடுத்தும், ஆட்களை ஏவி விட்டு.நாம் ஜஸ்டிஸ்கக்ஷியாரிடம் பணம் வாங்கிக்கொண்டு பத்திரிக்கை நடத்துவதாகவும், ஜெயிலுக்குப் பயந்துகொண்டும் பதவிகளுக்காசைப்பட்டும் சர்க்காருக்கனுகூலமாய்த்திரும்பி விட்டதாகவும், இன்னும் பல இழிவான காரணங்களையும்,சொல்லி அதனால்,“குடிஅரசை” வாங்கி வாசிக்கக்கூடாதென்றும், ஆங்காங்கு திண்ணைப்பிரசாரங்கள் நடத்தி வருவதாய் அடிக்கடி நமக்குத் தகவல்கள் எட்டிக் கொண்டே வருகின்றன. இவற்றைப்பற்றி நமது உப.பத்திராதிபர் இரண்டொரு இடங்களில் நேரிலும்பார்த்திருக்கிறார். “குடி அரசு”க்கும் அதன் பத்திராதிபருக்கு செல்வாக்கு குறைத்தும் போவதினாலேயே, பிராமணரல்லாதாருடைய முன்னேற்றத்தை அடக்கி விடலாமென்று நினைப்பது, சீப்பை எடுத்து ஒளித்துவைத்துக்கொண்டால் கலியாணத்தையே நிறுத்திவிடலாம் என்று நினைக்கிற அறிவீனத்தைப்போற் தான் முடியும். இவ்வித விஷமப் பிரசாரகர்கள் இரண்டொரு பத்திரிக்கையை திருப்பி அநுப்பிவிடச்செய்தபோதிலும், பத்திரிக்கையின் வளர்ச்சி நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு மேல் வளர்ந்துகொண்டுதான் போகிறது அது எப்படியானாலும்,நமக்கு கவலையில்லை. தேசவிடுதலையின் பொருட்டும் பிராமணரல்லாதார் முன்னேற்றத்தின் பொருட்டும் நமதுகருத்தை வெளியிட பத்திரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, பத்திரிக்கை நடத்தி, அதனால் பணம்சம்பாதிப்பதற்காக அதை நாம் வைத்துக்கொண்டிருக்கவில்லை யென்பதை மாத்திரம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கல்பாத்தி தெருப்பிரவேச வழக்கு விடுதலை

சென்றவாரம் திருச்சானூர் ஆதித்திராவிடர் கோயில் பிரவேச வழக்கின் தண்டனை ரத்தானது பற்றி எழுதியிருந்தோம். அதுபோலவே, கல்பாத்தித் தெருப்பிரவேசம் சம்பந்தமாய் பாலக்காடு சப் மேஜிஸ்திரேட் கோர்ட்டில் நடந்துகொண்டிருந்த வழக்கிலும் எதிரி விடுதலையாகிவிட்டதாய் தகவல் எட்டியிருக்கிறது.

பெஞ்சுமாஜிஸ்திரேட்டுகள்

கௌரவ பெஞ்சு மாஜிஸ்திரேட்டுகள் ஒருதடவை நியமனம்பெற்றால், 5 வருடக்காலத்துக்கு இருக்கலாம் என்ற முறையை மாற்றி இப்போது 3 வருடங்களுக்கொருமுறை நியமனம் செய்யவேண்டுமென்பதாக கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

(நீலலோசனி)

ஸ்ரீமான். R. K. சண்முகம் செட்டியாரின் மெய்யுரை.

நமது தேசிய மன்றமாகிய காங்கிரஸ், கான்பூரில் கூடிக்கலைவுற்றது. காங்கிரஸ் மேடையில் தயாரிக்கப்பெற்றுள்ள வேலைத்திட்டம் நிறைவேறுவது தெய்வ எத்தனத்தைப் பொறுத்துள்ளதென்று நமது மாகாணக்காங்கிரஸ் கமிட்டி காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமான். ஆர்.கே. சண்முகம் செட்டியார் கூறியுள்ளார். அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற நம்பிக்கையோடுவாழும் நம்மவர்க்கு ஸ்ரீமான். செட்டியாரவர்கள் இவ்வாறு செய்தியனுப்புவதற்குக் காரணம் என்னை? இது இந்தியா சட்டசபையில் சுயராஜ்யக்கட்சியின் முதல் கொரடா(சவுக்கு) ஸ்தானம் வகிக்கும் ஸ்ரீமான் சண்முகம் செட்டியாரின் நம்பிக்கைக் குறைவையே ஒருவாறு வெளியிடுகின்றதல்லவா?

(குமரன்)

காந்தியடிகளின் ஓய்வு

மகாத்மா காந்தி தமது உடல் நிலை காரணமாக இன்னும் ஓராண்டு சபர்மதி ஆசிரமத்திலே ஓய்வு எடுத்துக்கொள்ளப்போகிறார். அவர் அரசியல் விஷயங்களில் தலையிட மாட்டாராயினும் சபர்மதி ஆசிரமத்தின் நிர்வாகத்திலும் அகில இந்திய நூல் நூற்பவர்சங்கத்தின்வாயிலாக நாட்டு, கதர் இரண்டு விஷயங்களிலும் தமது முழுக்கவனத்தையும் செலுத்திவருவார்.மகாத்மா இன்னும் ஓராண்டுவரை அரசியல் இயக்கத்தில் தலையிடாதிருப்பது பற்றி நாட்டிலே பலர் வருந்தக்கூடுமாயினும், நாட்டின் தற்கால அரசியல் நிலையில் மகாத்மா அதில் தலையிடாமல் நாட்டு கதர் முதலிய நிர்மாணதிட்டத்திலும் தமது ஆத்மாநுபவ வளர்ச்சியிலும் மட்டும் சிந்தை செலுத்திச் சிலகாலம் அமைதியாக வாழ்ந்திருத்தல் விரும்பத்தக்கதென்றே நாம் கருதுகிறோம்.

(லோகோபகாரி]

விருதுநகர் புத்தகசாலை ஆண்டு நிறைவு விழா.

விருதுநகர் ராவ்பகதூர், ரத்தினசாமி நாடார் ஞாபகச்சின்ன புத்தக வாசகசாலையின் 8-வது ஆண்டு நிறைவு விழா, ஸ்ரீமான். பண்டிதர் டி. மாசிலாமணி நாடார் அவைத்தலைமையின்கீழ் இம்மாதம் 9-ந் தேதி கொண்டாடப் பெற்றது. பல அறிஞர்கள் சொன்மாரி பொழிந்தனர் என வாசகசாலை தலைவர் எழுதுகிறார்.

ஸ்ரீமான். நாயக்கர்.

ஸ்ரீமான். ஈ. வெ ராமசாமி நாயக்கர் இம்மாதம் 10-ந் தேதியன்று, திருப்பூர், கோயமுத்தூர் முதலிய இடங்களுக்குச் சென்றுள்ளார்.

பிராமணர்கள் சூழ்ச்சி

"ஸ்ரீமான். சத்தியமூர்த்தியின் தன்னை அறியா மெய்யுரைகள்"

ஸ்ரீமான். S.சத்தியமூர்த்தி அவர்களின் ராஜீயவாதத்தைப் பற்றி நாம் அநேக விஷயங்களில் மாறான அபிப்ராயம் கொண்டிருந்தாலும், அவருக்கு ஆவேசம் வரும் காலங்களில் தன்னை அறியாமலே ராஜதந்திரத்தைக் கையாளாமல் உண்மையைக் கொட்டிவிடுகிறார் என்கிற சந்தோஷம் நமக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. சமீபகாலத்திற்குள் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு உண்மையை தாராளமாய் வெளியிட்டிருக்கிறார். அவற்றில் ஒன்று மிகவும் முக்கியமானது. இது பிராமணரல்லாத பொது ஜனங்கள், நன்றாய் அறியவேண்டிய விஷயம். அதாவது, காங்கிரஸ் தினம் என்று டிசம்பர் 26-உ சென்னை சவுந்தர்ய மகாலில் ஸ்ரீமான். யூ. ராமராவ் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீமான். சத்தியமூர்த்தி பிராமணரல்லாதார் மகாநாட்டைப்பற்றி பேசுகையில் ஒரு பெரிய ரகசியத்தை வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு:—

ஸ்ரீமான். யாதவர் இங்கு வந்து வகுப்பு துவேஷத்தை மூட்டப் பார்த்தார். சட்ட மெம்பர் (மஞ். சர் C. P.ராம்சாமி அய்யர்) தாம் பிராமணரென்று பயந்து சட்டப்பிரகாரம் கவனிக்காது விட்டு விட்டார்; இவருக்கு தைரியமில்லாவிடில், தம் பதவியை ராஜினமா செய்துவிட்டு ஒரு பிராமணரல்லாதாரைக்கொண்டு ஏன் தக்கது செய்திருக்கக் கூடாது."

(இது 27-12-25 சுதேசமித்திரன் அனுபந்தம் 7-வது பக்கம் 4-வது கலம் 24-வது முதல் 32-வது வரி வரையில்.) என்றுபேசியிருக்கிறார். இவ்வுரைகளின் மூலம் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிராமணர்கள் தங்கள் அதிகார பதவியை எப்படி உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்,என்பதையும்,தாங்களாகச்செய்யப் பயப்படுகிற சந்தர்ப்பங்களில் என்னவிதமான வழியைக் கையாடுகிறார்கள் என்கிற விஷயத்தையும், பகிரங்கமாய் எடுத்து காட்டிவிட்டார். இது, கல்பாத்தி விஷயத்தில் தங்கள் அதிகாரம் எப்படி உபயோகப்படுத்தப்பட்டது என்பதும், தாங்கள் கொஞ்சம் பயப்படவேண்டிய சந்தர்ப்பமாகிய காஞ்சிபுரம் மகாநாட்டில் ஸ்ரீமான். ஈ.வெ. ராமசாமி நாயக்கர் வகுப்புவாரி தீர்மான விஷயத்தில் ஒரு பிராமணரல்லாதாரைக் கொண்டு அத்தீர்மானம் ஒழுங்குக்கு விரோதமானது என்று தள்ளும்படி செய்ததும் எப்படி தக்கது செய்யப்பட்டது என்பதும், வாசகர்கள் உணர்வதற்குச் சரியான சந்தர்ப்பம் என்று நினைக்கிறோம்:—

இந்த இரண்டு விஷயத்திலும், இருவகையில் தாங்கள் வெற்றி அடைந்ததை மனதில் வைத்துக்கொண்டே வெற்றிமுரசு அடிக்கும் ஆனந்தத்தில் உண்மையைக் கக்கி விட்டார். இதைப்பற்றி பிராமணரல்லாதார் சார்பாக நாம் நன்றிசெலுத்துகிறோம். ஆனாலும், சட்டமெம்பரையும், காஞ்சிபுரம் மகாநாட்டு தலைவரையும் வெளியாக்கி

கிலாபத் கான்பரஸ்.

ஜனாப். தஞ்சை ஜில்லா கிலாபத் கமிட்டி காரியதரிசி எம்.எஸ். பாப்பு சாய்பு எழுதுகிறார்:—

நாட்டில் ஒத்துழையாத் திட்டம் தோன்றியதே கிலாபத் எழுச்சிக்கு அடிப்படையானதாகும். இன்றைய இந்து நண்பர்கள் காங்கிரஸ் ஸ்வராஜ்யக் கட்சிகளை எவ்விதம் மிகவும் அவசியமெனக் கருதி வளர்த்து வருகிறார்களோ, அதைவிட அநேக மடங்கு முக்கியமானதாகும். முஸ்லீம்களுக்கு கிலாபத் இயக்கம் காங்கிரஸ் மகாசபையானது, சகல மதத்தினர்களுக்கும் பொதுவென்றும், ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட வகுப்பின் முற்போக்கிலும், கட்டுப்பாட்டிலும் காங்கிரஸ் மகாசபை தன் சக்திக்கியன்ற உதவிகளைச் செய்யத்தவறுவதில்லை என்றும், நான் நினைப்பது அநேகமாய் உண்மையாகவே இருக்கலாம்.

முதலில் தமிழ் மாகாண கிலாபத் கமிட்டியை ஏற்படுத்திய காலத்தில் எண்ணற்ற ஹிந்துத்தலைவர்களும், நண்பர்களும் அளவுக்குமேல் ஊக்கங்காட்டினார்கள். இவ்வளவு கோலாகலமாய் வேலை செய்த மாகாண கிலாபத் கமிட்டி வர வர அயர ஆரம்பித்துவிட்டது. இதற்கு எண்ணற்ற காரணங்கள் இருப்பினும், பணம் மாகாணத்திற்கென வைத்துக் கொள்ளாததேயாகும். காலம் சென்ற அப்துல் மஜித் ஷரார் அவர்கள் தலைமையின் கீழ்த் தஞ்சையில் கூடிய கிலாபத் மகாநாட்டிற்குப் பிறகு, ஒவ்வொரு வருடமும் எவர் மனதிலும் உதிப்ப சந்தியில் இழுத்துவிட்டு விட்டதினால் அவர்களின் மனக்கசப்புக்கு ஸ்ரீமான். சத்தியமூர்த்தி ஆளாகாமல் இருக்க முடியாதே என்பதற்கு நாம் மிகவும் வருந்துகிறோம்.

தவிர "மதுவிலக்கு விஷயத்தில் பிராமணரல்லாத மந்திரிகள் என்னசாதித்துவிட்டார்கள்" என்று அடிக்கடி பிராமணப்பத்திரிக்கைகளான இந்து சுதேசமித்திரன் சுயராஜ்யா முதலியவை பாமர ஜனங்களுக்கு பிராமணரல்லாதார் கக்ஷியின்பேரில் வெறுப்புண்டாகும்படி தங்கள் பத்திரிகையின்மூலம் விஷமப்பிரசாரம் செய்வது யாவரும் அறிந்த விஷயம். போதாக்குறைக்கு காஞ்சீபுரம் மகாநாட்டிற்குப் பிறகு என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமான். திரு. வி. கல்யாணசுந்திர முதலியாரும் மது விலக்கு என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு, ஸ்ரீமான். C. ராஜகோபாலாச்சாரியாரும் புறப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமான். ஆச்சாரியாருக்கு பதில் சொல்லும் வழியில் மதுவிலக்கைப்பற்றி, ஸ்ரீமான். S. சத்தியமூர்த்தி பேசுகையில் "நாம் சுயராஜ்யம் பெற்றாலொழிய குடியை ஒழிக்க சட்டம் ஏற்படுத்த முடியாது" என்று சொல்லியிருக்கிறார். இதனால் இப்பத்திரிக்கைகள் பிராமணரல்லாத மந்திரிகள்பேரில் குறை கூறும் கூற்றுக்கு என்ன ஆதாரம்இருக்கிறதுஎன்பதை வாசகர்களே அறிந்து கொள்ளலாம்.

ஓர் முஸ்லீம் அனாதைப்பிரேதமும் ஈரோடு முனிசிபாலிட்டியின் செய்கையும்.

ஈரோடு ரயில்வேஸ்டேஷன் பிராஞ்சு தபாலாபீசுக்குப் பக்கத்தில் ஓர் அனாதை முஸ்லீம் இறந்துபோய்விட்டார். அதைப்பற்றி ஈரோடு முனிசிப்பாலிட்டியார் ஈரோடு முஸ்லீம்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியம். அப்படி அறிவிக்காமல் ஷை பிரேதத்தை முனிசிபல் சேனிட்டரி இன்ஸ்பெக்டராகிய ஸ்ரீமான். ராமசாமி அய்யர் ஓர் குப்பைவாரும் வண்டியில்,குப்பைவாரும் பறையனைக்கொண்டு பிரேதத்தை எடுத்து வண்டியில் போட்டு வரும்வழியில், ஜனாப் E. M. S. முகம்மது உசேன் சாயபு கண்டு பிரேதத்தைத் தடுத்து டவுன் மஜீத்துக்கு கொண்டுவரும்படி சொல்லியதற்கு அம்முனிசிபல் பிராமண உத்தியோகஸ்தர் வெறுப்புண்டாகும்படியான வார்த்தைகளை

தில்லை. திருப்பூரிலும், சேலத்திலும் கிலாபத் மகாநாடு கூட்டப்பட்டது. ஆனால் திருவண்ணாமலையிலும், காஞ்சிமா நகரத்திலும் கிலாபத் பிரச்சினை நழுவவிடப்பட்டது.

இவைகளை யெல்லாம் சிந்திக்கையில், எதிர்காலத்தமிழ் நாட்டு முஸ்லீம்களின் க்ஷேமாக்ஷத்திற்கு ஒரு வழிதேட முயற்சிக்கவேண்டுவது மிக்க அவசியமென்பதை நாட்டவர்கள் உணர்வார்கள்.நிற்க மாகாண கிலாபத் மகாநாட்டைக் கூட்டுவதற்கென டிஸம்பர் மீ 11-ந்தேதியன்று சென்னையில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிக்கு ரூ. 250 கடன் கொடுக்கவேண்டும் என்று மகஜர் அனுப்பியிருந்தேன். அதற்கு நாளதுவரையில் பதில் கிடைக்கவில்லை. மேலும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியார் சென்ற வருஷம் தங்கள் கமிட்டிப் பணம் எவை எவைகளுக்கு எத்தனை ஆயிரக்கணக்கான ரூபாய்களாகச்செலவழிக்கப்படிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, நமது ஜில்லா கிலாபத் கமிட்டியின் வேண்டுகோட்கிணங்கி உதவிபுரிவார்களென்று நம்புகிறேன். ஏதோ சர்வவல்லமையுள்ள ஆண்டவன் தயவால் சென்ற வருடம் மாகாண கிலாபத் நாட்டை மௌலானா சௌகத் அலி அவர்களின் தலைமையில் கூடும்படி செய்த தஞ்சை ஜில்லா வாசிகள் இவ்வருடமும் ஏதோ ஒரு இடத்தில் யாராவது கிலாபத் மகாநாட்டைக் கூட்டிவைக்கவும், அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் மாகாண கிலாபத் கமிட்டி புத்துயிர் பெறவும் தக்க முயற்சிகளைச் செய்து வருகிறார்களேயாயினும், மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, முஸ்லீம்களிடம் கொண்டுள்ள அனுதாபத்தை விளக்கிக்கொள்ளச் செய்யப்பட்டுள்ள விஞ்ஞாபனத்தில், மாகாணக் கமிட்டியார் காலதாமதம் செய்யாமல் இச்சிறு அற்ப உதவியைச் செய்வார்களென்று நம்புகிறேன். கமிட்டி அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஏதோ நாட்டின் தவக்குறைவால் தோன்றிய அபிப்பிராயபேதக் கட்சியின் வன்மையை இதில் காட்டாதிருக்க ஆண்டவன் அருள்சுரப்பானாக.

ஐரோப்பாவில் வெள்ளப்பாழ்.

ஆயிரக்கணக்கான பவுன்கள்சேதம்

ஜெர்மனிக்கு 10 லக்ஷம் மார்க்குகள் நஷ்டமாயிருப்பதுடன், பெல்ஜியத்தில் 8000 வீடுகளுக்குள் ஜலம் சென்று பல ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குச் சேதத்தை விளைவித்திருக்கிறது. லண்டனிலுள்ள தேம்ஸ்நதியில பெருத்த வெள்ளம் ஏற்பட்டு, அதிக நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. பிரான்ஸ் தேசத்தில் பல மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கானவர்கள் வேலையின்றி, வீடின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

பிரான்ஸ்கு 2 கோடி பிராங்கு நஷ்டம்; கவலையால் ஸ்திரீகளுக்குப் பைத்தியம் பிடிக்கிறது.

பெல்ஜீயம் ராஜ தம்பதிகள் நன்கொடை அளித்திருக்கின்றனர்.

ஜனவரி 1-ந் தேதி

இம்மாதம், 2, 3, தேதிகளில் ஐரோப்பாவெங்குமே பெருத்த புயல்காற்று அடித்துக் கொண்டிருந்தது. இப்புயலாலிருந்த சேதமும், வெள்ளப்பெருக்கும், இங்கிலாந்து, லண்டன், ஹாலந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி முதலிய பல தேசங்களில், பல பாகங்களில் ஏற்பட்டது, லண்டனிலுள்ள, வடவேல்ஸிலும், சமுத்திரக்கரையை அடுத்த சகல பாகங்களிலும், மணிக்கு 85 மைல் வேகத்தில் காற்று அடிக்கவே,ஒரு புகைப்போக்கி கீழே விழ ஒருவர் கொல்லப்பட்டுப் போனதுடன், சுமார் 10 பேர்கள் வெள்ளச்சேதத்தால் இறந்து போனார்கள். ஹாலந்திலுள்ள, மியூஸ், வால்ஸன், லெக் முதலிய நதிகளில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டு, ரெயில்வே பாதைகளை பல மைல் தூரம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

உபயோகித்தார். அம்மாதிரி அவ்வுத்தியோகஸ்தர் செய்தது ரொம்பவும் வெறுக்கத்தக்க விஷயம். அப்படியிருந்தும் ஷை. முகம்மது உசேன், பிரேதத்தைக் கண்டிப்பாய் நீங்கள் கொண்டு செல்லக்கூடாதென்றும், அப்படி செய்வது எங்கள் மார்க்கத்திற்கு ஒவ்வாதென்றும் நான் போலீசில் ரிப்போர்ட் செய்கிறேனென்றும் சொல்லியபிறகு, பிரேதத்தை டவுன் மஜீத்துக்கு கொண்டு போகச்செய்தார். இம்மாதிரியான விஷயங்களில் முனிசிபாலிட்டியார் இம்மாதிரி நடந்து கொண்டதானது, ஈரோடு முஸ்லீம்களுக்கு ரொம்பவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இனியாகிலும் இம்மாதிரி நடக்காமலிருக்க ஈரோடு இந்து-முஸ்லீம் கவுன்சிலர்களும் பொதுஜனங்களும் மேலதிகாரிகளும் கவனிக்கக் கோருகிறோம்.

ஈரோடு. 3-1-26 } இ. மு சே. முகம்மது உசேன்

பல கிராமங்களைக் காலிசெய்துவிட்டு ஜனங்கள் வெளியிடங்களுக்குப் போய்விட்டனர். ஹாலண்டு மகாராணியாரும், அரசர் பெருமானும் தகுந்த சிரத்தை எடுத்து வருகின்றார்கள். புயலின் காரணமாக நடுச்சமுத்திரத்தில் அகப்பட்டுத் தவித்துப் போன கப்பல்கள் பல தெய்வாதீனமாய்த் தப்பிக் கரையை அடைந்திருகின்றன. 6000 டன் நிறையுள்ள "கொரேனேடா" என்ற கப்பலில் இருந்த 100 மாலுமிகளும், 60 பிரயாணிகளும் என்ன கதியானார்களென்பதைப் பற்றி இதுவரையிலும் ஒன்றுமே தகவல் கிடைக்கவில்லை.

சென்ற சில தினங்களாக பெரும் புயல் அடிப்பதுடன் கனத்த மழையும் பெய்து வருகிறது. வயல்களெல்லாம் ஜலமாக நிறைந்துவிட்டன. லண்டனில் ஒரு மணிக்குள் ஒரு கோடி டன் மழை பெய்திருக்கிறது. பல வீட்டுக்கூரைகள் நாசமாகிவிட்டன. கம்பியில்லாத் தந்தி இயந்திரங்கள் பாழாகிவிட்டன.

ஜனவரி 3-ந்தேதி.

ஐரோப்பா கண்டம் முழுவதும் வெள்ளத்தினால் நிறைந்திருக்கிறது. ஜெர்மனியிலுள்ள ரைன் நதியில் வழக்கமாகப்போகும் ஜலத்தைவிட $31\frac{1}{2}$ அடி ஜலம் அதிகமாகச் செல்லுகின்றது. ரைன் நதியின் ஓரமாக இருக்கும் வீடுகளின் மூன்றுவது மெத்தை வரைக்கும் தண்ணீர் வந்துவிட்டது. ரோட்டுகளில் ஜனங்களும், வண்டிகளும் செல்லுவதற்கில்லை. லட்சக்கணக்கான பவுன்களுக்குக் சேதமேற்பட்டிருக்கிறது.

பிரான்சில் பல மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதால், அநேக ஆலைகள் சேதப்பட்டு, மூடப்பட்டுக் கிடக்கின்றன. பெல்ஜியத்திற்குச் செல்லும் ரயில்வண்டிகள் அநேக மைல்கள் தூரத்திற்கு மெள்ள மெள்ளச் செல்லவேண்டியதாயிருக்கிறது. ஜல சப்ளை இந்திரசாலைகளில் ஜலம் நிறைந்து விட்டதால் நாட்டில் குடி ஜலத்திற்குக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. பல இடங்களில் ரெயில் செல்வதற்கு வழியில்லை. சில இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்து பலருக்கு உயிர்ச் சேதமும், காயமும் விளைந்திருக்கிறது.

ஹாலண்டில் வெள்ளம் ஏற்பட்ட இடங்கள் பலவற்றிற்கு, ஹாலண்டு அரசரும், மகாராணியாரும் படகிற் சென்றார்கள். இவர்கள் சென்ற படகிற்குப் பின்னால் உணவுச்சாமான்கள் நிரம்பிய படகொன்று சென்று ஆங்காங்கு உணவின்றிக் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உணவு அளிக்கப் பட்டது. இந்த நாட்டில் கவலையின் காரணமாக சில ஸ்திரீகள் பைத்தியங்கொண்டு போனார்கள். பெல்ஜியம் தேசம் அதிகமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. லீஜ் என்னும் பட்டணத்தில் 8000 வீடுகளுக்கதிகமாக ஜலத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. பெல்ஜியம் அரசரும், மந்திரிகளும் வெள்ளப்பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டனர். வெள்ளம் ஏற்பட்ட இடங்களில். ஆயிரக்கணக்கான தண்ணீர் இறைக்கும் யந்திரங்களை வைத்து, ஜலத்தை வெளியேற்ற மந்திரி பிரயத்தனப்பட்டு வருகிறார். வெள்ளம் ஏற்பட்ட இடங்களில், வேலையில்லா நாட்களில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் வீதப்படி கூலிகள் ஜனங்களுக்குக் கொடுக்கும்படியாக தொழிலாக்கா மந்திரி வெள்ளம் ஏற்பட்ட இடங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஜனவரி 4-ந்தேதி

பெல்ஜியம் ராஜதம்பதிகள் சுமார் 10 லக்ஷம் ரூபாய்களுக்குமேல் நன்கொடை அளித்திருக்கிறார்கள்.

பிரான்சில் இன்னும் அதிக மழை பெய்வதால் ஜனங்கள் அதிகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஒய். ஸி. என்ற நதியில் 20 அடி ஜலம் வந்திருக்கின்றது. லாயிஸ், நாயின், கிரில் பியூ லாயிஸ், என்ற இடங்களுக்கிடையில் முக்கோண வடிவமான பிரதேசமனைத்தும் ஜலம் நிறைந்து நிற்கிறது. இது ஒரு பெரியகடலைப்போல் தோன்றுகிறது. அயின்னி என்ற நதியின் வெள்ளம், சோயிசன்ஸ் என்ற நகரின் பல தெருக்களில் புகுந்துவிட்டது. காயன் செயின்ட்லோ, என்னும் பிரதேசத்திற்கு இடையில் ஒரு ரெயில் வண்டி வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்ளவே, பிரயாணிகளைக் காப்பாற்றி அனுப்பினார்கள். ரெயில்வண்டி இந்த இடத்திலேயே விடப்பட்டது. பாரிஸில் குடி ஜலத்திற்காக வைத்துள்ள இடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால், குடி ஜலப்பஞ்சம் ஏற்பட்டு விட்டது. பீப்பாய்கள் பலவற்றில் குடிஜலம் சேமிக்கப்பட்டு ஜனங்களுக்குக் கொஞ்சம், கொஞ்சமாய்க் கொடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனவரி 5-ந் தேதி

லண்டனில் கனத்த மழைபெய்த வண்ணமாகயிருக்கின்றது, கினீவ், ஷிப்லேக் என்ற பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான கழனிகள் ஜலத்தால் நிரம்பிக்கிடக்கின்றன. சில கல்லூரிகளுக்குள் ஜலம்புகுந்து விட்டது. லண்டனிலுள்ள லண்டன், கென்னட் என்ற இருநதிகளிலும் கரைபுரண்டு வெள்ளம் வருகிறது. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்து இன்னும் கார்மேகங்கள் வந்துகொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருப்பதால், அதிகமழை பெய்யுமென்றும், இதனால் அபாயகரமான நிலைமை ஏற்படுமென்றும் தெரிகிறது.

வரப்பெற்றோம்.

லோகோபகாரி, காரியாலயத்தினின்றும், இவ்வருடத்திய ஷீட் காலண்டர் ஒன்றுவரப் பெற்றோம். விசேஷ தினங்கள், மற்றும் முக்கிய விஷயங்கள் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றன.

கல்வியில்லாத குறை

சென்ற வாரம், நமது "குடி அரசு," பத்திரிக்கையில் வெளியாகியிருந்த "கல்வியில்லாத குறை" என்னும் வியாசம், அப்பிச்சிமார் மடம் ஸ்ரீமான். ஆண்டமுத்துக் கவுண்டரவர்களால் எழுதப்பெற்றது (ப-ர்)

செத்த பாம்பாட்டம்.

தமிழ் நாட்டின் தேசிய பிராமணர்களின் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும், தமிழ்நாட்டு தேசிய பிராமணரல்லாதார் என்போருக்கு வெளியாகும்படி செய்தது, சேரன்மாதேவிகுருகுலமேயாகும். அக்குருகுல இரகசியத்தை வெளியாக்குவதற்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு தமிழ் நாட்டிலுள்ள பிராமணப்பத்திரிக்கைகளும், பிராமணத்தலைவர்களும் எவ்வளவோ இடைஞ்சல்கள் செய்துகொண்டு வந்திருந்தாலும், தமிழ் நாட்டிலுள்ள பிராமணரல்லாதார் பத்திரிக்கைகளும், பிராமணரல்லாதார் தலைவர்களும் எவ்வளவோ உதவி செய்ததின் பலனாய் முடிவில் வெற்றி கிடைத்ததோடு தமிழ் நாட்டிற்கே ஓர் புதிய உணர்ச்சியையும், உண்டாக்கி வைத்து, சேரன்மாதேவி குருகுலமும், கலைந்து போய்விட்டது என்பது உலகமே அறியும். அப்படியிருக்க, செத்த பாம்பை எடுத்து ஆட்டுவதுபோல், குருகுலத்தால் வயிறு வளர்த்த சில பிராமணர்கள், குறிப்பாய் ஸ்ரீமான். தி. ரா. மகாதேவய்யர் கொஞ்சகாலத்திற்கு முன்பு, பத்திரிக்கைகளுக்கு ஒரு விளம்பரம் அனுப்பியிருக்கிறார். அதில் குருகுலம் ஒழுங்காய் நடந்து வருகிறபாவனையாகவும், தானே அதில் ஆச்சாரியாராய் இருக்கிறது போலும், சுயராஜ்யக்கட்சியாரின் தேசிய திட்டம்போல,கல்விக்கு ஏதோ பல திட்டங்கள் வைத்திருப்பது போலும், பாசாங்கு செய்து பிள்ளைகளை அனுப்பும்படி பெற்றோர்களைக் கேட்கிறார். பிராமணரல்லாத பெற்றோர்கள் இம்மோச விளம்பரத்தை நம்பி தங்கள் பிள்ளைகளை அனுப்பிக்கொடுத்து ஏமாந்து போகாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

குருகுலம் அங்கு நன்றாய் நடந்துகொண்டிருப்பதாய், ஸ்ரீமான். வ. வெ. சு. ஐயர் சொல்லிக்கொண்ட காலத்திலேயே நாம் அங்கு போயிருந்த சந்தர்ப்பங்களில், பிள்ளைகள் நடத்தப்படும் முறையையும் பார்த்தோம். ஸ்ரீமான். மகாதேவய்யர் என்று சொல்லப்படுகிறவரும், அவர் குழந்தைகளும், கூனிமுறை என்பதாகப் பேர் வைத்துக்கொண்டு, தாங்கள் பழங்களும் தேங்காயும், வெல்லமும், கரும்பும், மாம்பழமும், முந்திரிகைப் பருப்பும், பேரீச்சம் பழமும், சாரப்பருப்பும் போன்றவைகளைச் சாப்பிட்டுக் கொண்டு, ஆஸ்ரமத்தில் படிக்கவந்த மற்ற பிள்ளைகளுக்கு, பிள்ளை ஒன்றுக்கு மீ ஒன்றுக்கு ரூ.13 வரையிலும்பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு 4ரூபாய் கூடப் பெறாத மாதிரியில் கஞ்சி சாதமும், அரிசிக்களியும், உப்பு, காரமில்லாத அரிசி உப்புமாவும், புளியில்லாத குழம்பும் இம்மாதிரி பதார்த்தங்கள், ஜெயிலைவிட மோசமான கவலையற்ற நிலையில் பக்குவஞ் செய்து, போட்டுக்கொண்டு இருந்ததை நாமும், நம்முடன் வந்த மற்றும் சில நண்பர்களும் நேரிலேயே பார்த்தோம்.

ஆதலால், சுயராஜ்யம் என்கிற பெயரினால், ஜனங்க்ள் ஏமாந்துபோய் அதற்குள்ளிருக்கும் தந்திரங்களை அறியாமல் சுயராஜ்யக்கட்சிக்குள் விழுவதுபோல், குருகுலம், ஆசிரமம் என்கிற பெயர்களினால், பெற்றோர்கள் ஏமாந்துபோய், அதன் ரகசியத்தை அறியாமல் தங்கள் பிள்ளைகளை அனுப்பி, பலிகொடுக்காதிருக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து. மனதார அறிந்ததையும், நேரில் பார்த்ததையும் தான் இங்கு எழுதியிருக்கிறோமே தவிர, மற்றப்படி வேறு எந்தக்காரணத்தையும் உத்தேசித்தல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்னாப்பிரிக்காவும் ஜாலவித்தையும்

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களை அவ்விடத்திய வெள்ளைக்காரர்கள், தீண்டாதார்போல் நடத்துவதாகவும், தேசத்தின் பிரஜைகளுக்குள்ள சம உரிமையை அடைவதற்கில்லாமல், வெள்ளைக்காரர்கள்சட்டம் செய்திருப்பதாகவும், இக்காரணங்களால், அங்கு பிழைப்பதற்காகப் போன நமது சகோதரர்களான சுமார் ஒன்றரை லக்ஷம் இந்தியர்கள் கஷ்டப்படுவதாகவும், அதற்கு ஏதாவது பரிகாரம் செய்துகொடுக்கும்படி நமது தேசிய காங்கிரஸை கேட்டுக்கொள்வதற்காக சிலர் அங்கிருந்து வந்திருந்ததும் அதற்கிணங்கி நமது தேசிய காங்கிரசும் மகாத்மா அவர்களின் அபிப்பிராயப்படி ஓர் தீர்மானத்தையும் நிறைவேற்றி, வந்திருந்தவர்கள் கண்ணைத்துடைத்து அனுப்பிவிட்டதும் வாசகர் அறிந்த விஷயம்.

இதைஅநுசரித்தே பிராமணரல்லாதார் காங்கிரசும் ஓர் தீர்மானத்தைச் செய்து விட்டது. பத்திரிக்கைகளும், இதைப் பற்றி எழுதி தங்கள் கலங்களை நிரப்பிக் கொள்ளுவதற்கு ஓர் சந்தர்ப்பத்தையும், அடைந்து கொண்டது. முடிவென்ன? இவ்வித தீர்மானங்களால், வெள்ளைக்காரர்கள் பயப்படப்போகிறார்களா? அல்லது தேசிய காங்கிரசினிடமாவது வெள்ளைக்காரர்களுக்கு மதிப்பிருக்கப்போகிறதா? நமது தேசீய காங்கிரஸோ, ஜாலவித்தைக்காரனுடைய செய்கைகள் போலாகிவிட்டது ஜாலவித்தைக் காரன் எப்படி, ஜனங்களை ஏமாற்றுவதற்கு தனது பைக்குள்ளிருந்து ஒவ்வொரு சாமானையும் வரவழைத்துக் காட்டிவிட்டு, கடைசியில்எப்படி நம்மை காசு கேட்க வருகிறானோ, அதுபோலவே காங்கிரசிலும் சிலரிருந்து ஜனங்கள் சந்தோஷப்படும்படி, பல தீர்மானங்களை எழுதிக்காட்டிவிட்டு, கடைசியாக நம்மிடம் ஓட்டுக் கேட்க வந்துவிட்டார்கள். இவர்களுக்கு எவ்வளவு சக்தியிருக்கிறது; இவர்களால் என்னென்ன காரியம் செய்ய முடியுமென்பது, வெள்ளைக்காரர்களுக்குத் தெரியுமா? தெரியாதா?. குப்பைஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி சந்திரனைப் பிடிப்பேனென்று சொல்லுவது எவ்வளவு நம்பத்தகுந்ததாயிருக்கும். அதுபோல, கல்பாத்தியில், நம்து கண்ணுக்கெதிரில், நம்மிடம் வாங்கித் தின்று பிழைக்க வேண்டியவர்கள், அவர்களைவிட கோடிக்கணக்காய் அதிகமுள்ள சமுகத்தாரை,—இந்த நாட்டாரை—இந்நாட்டு ஆதிமக்களை—தெருவில் நடக்கக்கூடாது; குளத்தில் குளிக்கக்கூடாது; கிட்ட வரக்கூடாது; கண்ணில் தென்படக்கூடாது; அவர்கள் தெய்வத்தைக் காணக்கூடாது;அவர்கள் வேதத்தைப் படிக்கக்கூடாது என்று கொடுமைப்படுத்துவதையும், அதற்காக 144 போடுவதையும், சகித்துக்கொண்டு இந்த 144-ஐமீறமுடியாமல், பயங்கொண்டு, புறமுதுகிட்டு ஓடிப்போகும்கூட்டத்தார், தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களை—துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டு ஆகாயக் கப்பல் வைத்திருப்பவர்களை மிரட்டுவதென்றால், அவர்கள் எப்படி பயப்படக்கூடும்? நமது நாட்டிலுள்ள நம்மை அந்நிய நாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்கள், செய்யும் கொடுமைகளை ஒழிப்பதற்கு, நமக்கு யோக்கியதை இருந்து, ஒன்றுகூடி ஏதாவது ஓர் முயற்சி செய்து வெற்றிபெற்றோமானால், பிறநாட்டார், நம்மைக் கண்டால் கொஞ்சமாவது மதிப்பார்கள். அப்படிக்கின்றி, நமது யோக்கியதை நமது நாட்டில் இப்படியிருக்க, தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களை —பீரங்கி—துப்பாக்கி ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, வைத்திருப்பவர்களை—மிரட்டுவதில் என்ன பிரயோஜனம்? உண்மையில் தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர் நம்மை நடத்தும் விஷயம் நமக்கு அவமானமாயிருக்குமானால், இந்தியாவில் நம்மை ஒரு சிலர் நடத்தும் விஷயத்தை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியுமா? நமக்கு. ரோஷமிருக்கிறது என்பதை அந்நியருக்குக் காட்டிக் கொள்ளவேண்டுமானால், நமது உடலை—பொருளை—ஆவியைவிடத்தயாராயிருக்கிறோமா? என்று பார்த்துக்கொள்ளவேண்டும் அதற்கு நாம் தயாராயிருக்கிறோமென்று நம்மனம் நமக்கு உறுதிசொல்லுமானால், இவற்றிற்கெல்லாம் தீர்மானமேதேவையில்லை; மனதில் நினைத்தவுடனேயேவழிதிறந்துவிடும்;சட்டங்களெல்லாம் சாம்பலாய்ப்போய்விடும். அப்படிக்கில்லாமல்,இம்மாதிரி ஜாலவித்தையான தீர்மானங்களை வைத்துக்கொண்டு பிழைக்கப்பார்க்கிறோம், அதனால் பணம் சேர்க்கப்பார்க்கிறோம்; பதவிபெறப்பார்க்கிறோம்; இந்நிலையில் இத்தீர்மானங்களுக்கு எப்படி சக்தி உண்டாகும்? ஆதலால் உண்மையாய், இவ்வித கஷ்டங்களுக்குப் பரிகாரம் வேண்டுமானால், மகாத்மா சொல்வதுபோல், சத்தியாக்கிரகம் செய்வதும், அதன் மூலமாய் உடல், பொருள், ஆவி ஆகியவைகளைத் துறக்கத் தயாராயிருப்பதும் தவிர, வெறும் ஜாலவித்தைகளினால் பலன் ஏற்படாதென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காலண்டர்கள் வரவு.

சேலம் குகை ஜவுளி அண்டு கெட்டி சாய சிகப்பு நூல் வியாபாரம் ஸ்ரீமான் த. கி. வெங்கிட்டராம செட்டியார் பங்காருசெட்டியார் கம்பெனியாரால் பல வர்ண அச்சுள்ள வேணுகோபால்சாமி படத்துடன் ஒரு அழகிய காலண்டர் வந்தனத்துடன் வரப் பெற்றோம்.

கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடிய ஓர் பிராமண வக்கீல்

இரண்டொரு வாரங்களுக்கு முன்புதான், சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல், ஸ்ரீமான். எம். ஆர். சுந்தரம் ஐயர் என்கிறவர் ஆறுமாதக் கடுங்காவலும், 1000 ரூபாய் அபராதமும் பெற்றிருந்ததை எழுதியிருந்தோம். இந்த வாரம், மற்றொரு பிராமணவக்கீலின் தண்டனையைப்பற்றி எழுத நேர்ந்திருக்கிறது. அதாவது:–சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான். ஏ துரைசாமி ஐயர் என்பவர் தனது கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடியதாக அவர் மீது ஓர் வழக்கு ஏற்பட்டு ருசுவானதின்பேரில், அவர் இனிமேல், வக்கீல் வேலையை செய்ய லாயக்கில்லை யென்று சொல்லி அவருடைய பெயரை வக்கீல் ஜாப்தாவிலிருந்து நீக்கிவிடுமாறு ஐக்கோர்ட் ஜட்ஜ் தீர்ப்புச் செய்துவிட்டார். கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடாத வக்கீல், வக்கீல் வேலைக்கே லாயக்கில்லை யென்று ஓர் பழமொழி சொல்லுவதுண்டு. அதற்கேற்றாற் போலவே, நமது பக்கங்களில் கக்ஷிக்காரன் பணத்தைக் கையாடாத வக்கீல்கள் மிகவும் அபூர்வம். இப்பொழுது, எத்தனையோ வக்கீல்கள் கக்ஷிக்காரர்களின் பணத்தைப் பல வழிகளிலும் சாப்பிட்டுவிட்டு, கல்லுப்போலிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஸ்ரீமான். ஏ. துரைசாமி ஐயருக்குமாத்திரம் ஏன் இந்தத் தண்டனை ஏற்பட்டதோ தெரியவில்லை.

உலகத்தில் எத்தனையோ பெயர்கள் திருடினாலும், கொலை செய்தாலும், போர்ஜரி செய்தாலும், அகப்பட்டுக் கொள்வதினாலும், போலீசாருக்கும், நியாயாதிபதிகளுக்கும் லஞ்சம் கொடுக்காததாலும், நன்றாய்க் குண்டுப் புரட்டு புரட்டத் தெரிந்த வக்கீல் வைக்காததினாலும், தண்டனையடைய நேர்வதுபோல், ஐயோ பாவம்!, நமது ஐயரவாளும் சிக்கிக் கொண்டார் போலும்.

கதர் இலாகா சிப்பந்திகள்

தமிழ் நாட்டில் கதர் ஸ்தாபனங்களுக்கு சம்பந்தப்பட்ட உத்தியோகங்களில் இருப்பவர்களில் சிலர் கதர் கட்டாமல் இருக்கிறார்கள் என்றும், கதர் கிளை டிப்போக்களில் கதர் விற்பவர்கள்கூட கதர் கட்டாமல் அன்னியநாட்டுத்துணியை அணிந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அடிக்கடி நமக்குப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. தற்காலம் காங்கிரசிலிருப்பவர்கள், எப்போதும் கதர் அணிய வேண்டியது அவசியமில்லை என்று ஏற்பட்டுவிட்டாலும் கதர்ஸ்தாபனங்களுக்கு அந்த சட்டம் எட்டும்படியான காலம் இன்னமும் வரவில்லை என்றே நினைக்கிறோம்.

அல்லாமலும் கதர் ஸ்தாபனங்களில் ஊதியம் பெற்றாலும், ஊதியம்பெறாமலானாலும், தொண்டு செய்பவர்கள் கதர் உடுத்தியாக வேண்டும் என்கிற நிபந்தனை ஏற்படுத்துவது பாவமல்லவென்றே நினைக்கிறோம். ஆதலால் தமிழ் நாட்டு கதர்-கவர்னர் கதர் ஸ்தாபன சிப்பந்திகளுக்கு இதைப்பற்றி ஓர் சுற்றுத்திரவு அனுப்பவேணுமாய் கோருகிறோம்.

கோயமுத்தூர் முனிசிபாலிட்டி

கோயமுத்தூர் முனிசிபாலிட்டியின் சென்றவருடத்திய நிர்வாக அறிக்கை வெளியாகியிருக்கிறது. அவ்வறிக்கையிலிருந்து பொதுவாக கோயமுத்தூர் முனிசிபாலிட்டியின் நிர்வாகம் ஒழுங்காய் நடைபெற்றிருப்பதாகவே காணப்படுகிறது. ரோடுகள் நன்றாயிருப்பதாகக் கலெக்டர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். கல்வி விஷயத்தில் கல்வி கற்கவேண்டிய சிறுவர்களில் 100-க்கு 99பேர் வீதம் வாசிக்கின்றார்களென்றும், பள்ளிக்கூடங்களில் சிறுவர்களான ஆண்களுக்கும், பெண்களுக்கும் நூல்நூற்கவும், நெய்யவும் கற்றுக்கொடுக்கப்படுகின்றதென்றும், ஆயுள்வேத வைத்தியசாலை மிகவும் உபயோகப்பட்டு வருகின்றதென்றும், அதில் இவ்வருடத்தில் 20.000 பேர்களுக்கு மேலாக நோயாளிகள் உதவிபெற்றிருக்கின்றார்களென்றும், பிளேக் நோய் சென்றவருடம் கோயமுத்தூருக்குள் வாராமலே தடுக்கப்பட்டிருக்கின்றதென்றும், காலரா முதலிய தொத்து வியாதிகளும், முன்னைய வருடங்களை விடமிகக் குறைவாய் இருந்திருக்கின்றதென்றும், முனிசிபல், செல்வநிலை ஒழுங்காய் இருக்கின்றதென்றும், சப் கமிட்டியார்கள் ஊக்கத்துடன் வேலைசெய்திருக்கின்றார்களென்றும், கவுன்சிலர்களும், சேர்மனும் ஒற்றுமையாயிருப்பதால் கவுன்சிலில் சமாதானம் ஏற்பட்டிருக்கின்றதென்று கலெக்டர் எழுதியிருக்கின்றாரென்றும், மற்றும்பல விஷயங்களும் குறிப்பிட்டிருக்கிறது. இதற்காகசேர்மென் ஸ்ரீமான். C. S இரத்தின சபாபதி முதலியாருக்கு கோயமுத்தூர் வாசிகள் மிகுதியும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஈரோடு முனிசிபாலிட்டியில் இருக்கிறவர்கள் இதைப்பார்த்து பொறாமைப்படாமலும், வெட்கப்படாமலுமிருக்க முடியாது. கோயமுத்தூர் சேர்மனைப்போல உள்ளூர் வாசியாகவும், உள்ளூர் க்ஷேமத்தில் அக்கரை ஏற்பட வேண்டியவர்களாகவும் உள்ள ஒரு சேர்மன் ஈரோட்டுக்கும் ஏற்பட்டால் ஓர் காலத்தில் இது போல் சந்தோஷப்படக்கூடும். இதுசமயம் வீணாக ஆசைப்படுவதில் பிரயோஜனமில்லை.

கோயமுத்தூர் ஸ்ரீமான். சி. வெங்கிட்டரமணய்யங்காரின் 2. லக்ஷம் ரூபாய் நன்கொடை

கோயமுத்தூர்; ஸ்ரீமான். சி. வெங்கட்டரமணய்யங்கார் 2,லக்ஷம் ரூபாய் தேசியவேலைக்காக நன்கொடை கொடுத்திருக்கின்றாரென பல பத்திரிக்கைகள் பிரசுரித்து வந்தன. இதைப்பற்றி “ஓர் சந்தேகி” என்னும் புனைப் பெயருள்ளநண்பர்ஒருவர் ஷெ நகரில் பிரசுரமாகும் “மகா ஜனநேசன்” பத்திரிகைக்கு (4-1-26) ஓர் கடிதம் எழுதியிருக்கிறார். இதை, பத்திரிகாசிரியர், இந்த விஷயத்துக்கு தாம் பொறுப்பாளியல்லவெனக் கூறி அதன் கீழ், ஷெ நண்பருடைய கடிதத்தைப் பிரசுரித்திருக்கின்றனர். அக்கடிதமாவது:-

“ஸ்ரீமான். சி. வெங்கிட்டரமணய்யங்கார், தர்மத்திற்காக 2,லக்ஷம் ரூபாய் நன்கொடை அளித்திருப்பதாகச் சகல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருக்கிறது. அதனுடைய விஷயத்தைப் பற்றி விரிவாக ஏந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. அதைப்பற்றி நான் தனியாக—அந்தரங்கமாக விசாரித்ததில் அதைப் பற்றிய நற்செய்தியும் கிடைக்கவில்லை.”

ஈரோடு தாசில்தார் ஸ்ரீமான். சாமுவேல் பிள்ளையின் வந்தனம்.

இம்மாதம் 1-ந்தேதியன்று குளத்தில் மூழ்கி மரணமடைந்து கடவுள் திருப்பாதத்தையடைந்த எனது மக்கள் தானியேல், தாவீது ஆகிய இருவரின் மரணத்தை முன்னிட்டு, பல பெரியோர்கள், மிஷனெரிகள், சிநேகிதர்கள், பந்துக்கள் முதலிய பலரிடமிருந்தும் தினமும் அனுதாபக் கடிதங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய கடிதங்களை எனக்கும், எனது மனைவியாருக்கும், குடும்பத்தினருக்கும் மன ஆறுதலைக்கொடுத்து வருகின்றது. இந்தக் கடிதங்களை அனுப்பியவர்களின் அநுதாபத்திற்கும், அன்புக்கும் கடமைப்பட்டுள்ளேனாயினும், தனித்தனியாக அவர்கள் யாவருக்கும் பதில் எழுத அசக்தனாயிருப்பது பற்றி, இதன் மூலம் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈரோடு. 7–1–26 } A. P. சாமுவேல் பிள்ளை

விற்பனை விளம்பரம்

அடியிற் கண்ட சாமான்களை கோயமுத்தூர் ஜில்லா போர்டு இன்ஜினியர் ஆபீசில் 1926–ம் வருடம் ஜனவரி மாதம் 15-ந் தேதி காலை 11மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

“7½ ப்ரேக் ஹார்ஸ் பவர் பெட்ரோல் என்ஜின் பம்பு, H. T. மாக்னெடோ, 6 அங்குலம் குருக்களவுள்ள பெண்ட் இவைகள் கூடிய ஒத்தை சிலிண்டர்” ரீவில் டைரெக்ட் கப்பிள்ட் இன்ஜின் ஒன்று.

ஷை இன்ஜினையும், அதற்குச் சேர்ந்த சாமான்களையும், ஆபீஸ் வேலை நாட்களில் காலை 11மணிமுதல் மாலை 3மணி வரையிலும் தேவையானவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்து கொள்ளலாம்.

ஆர். எல். மல்லாய்,
டிஸ்ட்ரிக்ட்போர்டு
இன்ஜினியர்
கோயமுத்தூர்.

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்.

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.

உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகைஷயும்."
குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப் பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்குவிபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

வைத்திய சந்திரிகை.

வைத்திய சாஸ்திரத்தின் தத்துவத்தை எடுத்துச்சொல்லும் அருமையான மாதசஞ்சிகை. பத்திராதிபர் மதுரை பண்டிதர் S. நாராயண அய்யங்கார். பல வைத்திய நிபுணர்க்ளால் எழுதப்படும் வைத்திய வியாசங்களும் மலிந்திருக்கும்.

வருடசந்தா ரூ. 2—0—0
வெளிநாட்டுக்கு ரூ, 3—0—0

மானேஜர், வைத்திய சந்திரிகை, கரூர்.

"தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சநதா ரூபாய் ஐந்து.

மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி ரங்கூன்.

"தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

"தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. **5.**

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையஜாப்தாவுக்கு எழுதங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

போட்டோ படங்கள்.

எங்கள் ஆபீசில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு உயர்தர கலர் போட்டோ படங்கள் பிடிக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

முக்கிய கவனிப்பு.

18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.

குடிஅரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 வருஷத்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சிக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம் காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0
நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0
நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.